Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**அற்புதன் அச்சகம்**

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை (14.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 045

## வடக்கில் தொழிற்பயிற்சி நிலையங்கள் புதிதாக உருவாக்க செயற்றிட்டம்

கடந்த 30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு இளைஞர் யுவதிகளுக்காக 7 தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என பிரதி கல்வி அமைச்சரும் இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மொஹான்லால் கிரேரோ தெரிவித்தார்.

வரவு-செலவு 2015 இன் மூன்றாவது முறை வாசிப்பின் தெரிவுக்குழு சந்தர்ப்பத்தின் ஒன்பதாம் நாள் வாசிப்பின் விவாதத்தின் நேற்று நாடாளுமன்றில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சின் 156 மற்றும் 215நிதி தொடர்பில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் யுனிசெப்பின் நிதியினா

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நீதிபதிக்கு திடீர் இடமாற்றம்

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வவுனியா மேல் நீதிமன்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் உடனடியாக

19 ஆம் பக்கம் பார்க்க

## உறவுக்கு பாதிப்பு இல்லை



சீனாவின் நீர்மூழ்கி கப்பல்கள் கொழும்புக்கு வந்து செல்வது தொடர் பில் இந்தியாவுக்கு பிரச்சினையில்லை என்று இந்திய கடற்படைத்தளபதி சீப் அட்மிரல் ஆர்.கே. டோவான் தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறை மூகத்துக்கு சீனாவின் நீர்மூழ்கி கப்பல்கள் வருவது சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பிரச்சினை யாகும். இது இந்தியாவுக்கு பிரச்சினையில்லை என்று இந்திய தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸின் கடற்படை தளபதி அட்மிரல் பேனாட் ரோகல் இந்தியாவுக்கு விஜயம் செய்து தம்மை சந்தித்த போதே இந்திய கடற்படை தளபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

## மவுரித்தானிய ஜனாதிபதி மகிந்தவுடன் சந்திப்பு



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள மவுரித்தானிய ஜனாதிபதி மொஹமட் அவ்ள்ட் அப்டெல் அசீஸ் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது இருநாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் பின்னர் இரு நாட்டுத் தலைவர்கள் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சத்திடப்பட்டன.

19 ஆம் பக்கம் பார்க்க

# பொது எதிரணியில் கூட்டமைப்பு இல்லை



எதிர்வரும் ஜனவரி மாதம் நடாத்தப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்தராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கான பொதுக் கூட்டணியில், "தற்போதைய நிலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்கவில்லை" என்று அதன் தலைவர் இரா. சம்பந்தன் பிபிசி தமிழோசையிடம் கூறியுள்ளார்.

குறித்த பொதுக் கூட்டணிக்குள்ளேயே இன்னும் சில விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட வேண்டியிருப்பதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

இதனிடையே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்குமாறு அரசாங்கத் தரப்பிலிருந்து வந்திருக்கின்ற அழைப்பை பரிசீலிக்காமல் நிராகரிக்க முடியாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கூறினார்.

"அவர்களுடைய செயற்பாட்டில் எமக்கு திருப்தி இல்லாமல் இருந்தாலும் கூட, அவர்கள் ஓர் அழைப்பை விடுக்கின்ற போது நாங்கள் அதுபற்றி சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்றார் சம்பந்தன்.

ஜனாதிபதி தேர்தல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூடி ஆராய்ந்து யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் முடிவொன்றை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மேலதிக ரயில் சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையில், இன்று முதல் மேலதிக ரயில் சேவை நடாத்தப்படும் என்று யாழ்ரயில் நிலைய அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார். இந்த மேலதிக ரயில் சேவை, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய கிழமைகளிலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஞாயிறு, செவ்வாய், மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளிலும் இடம் பெறும். கொழும்பிலிருந்து இரவு 10 மணிக்கு புறப்படும் இந்த ரயிலானது, மறுநாள் அதிகாலை 6.55 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை அடையும்.

அதேபோல், யாழ்ப்பாணத்திலிருந்து காலை 8.40 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ரயில் சேவை, மாலை 5.30 மணிக்கு கொழும்பை அடையும். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான மேலதிக சேவை, இன்று முதல் ஆரம்பிக்கும் அதேவேளை, யாழ்ப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலக்குகள் எதுவுமின்றி பயணிக்கிறது கூட்டமைப்பு

### யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள் மனக்கசப்பு

ஜனாதிபதித்தேர்தலில் மகிந்த மீண்டும்போட்டியிடலாம் என்ற நீதிமன்றஅறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அரசுடன் இணங்கி செல்வதற்கான காய் நகர்த்தல்களை மேற்கொண்டுவருகின்றார்.

ஆனால் இதற்கு மாறாக எதிராக வடமாகாண முதல்வர் விக்கினேஸ்வரன் இந்தியாவில் அரசுக்கு எதிரான முன்வாதங்களை பிரயோகித்து பேசி வருகின்றார்.

இவ்வாறு தமிழர்களுக்கு தலைமைதாங்கும் தலைவர்கள் ஒன்றுமைப்படாது ஆளுக்காள் முரண்கருத்துக்களை முன்வைப்பது அபிவிருத்தியின் பாற்படாது.

யாழ். பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் ஒருவர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டபின்னார். இவ்வாறு காட்டமாக கருத்து தெரிவித்தார்.

மேற்படி விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தமிழ்த்தேசியத்

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டிஷ் விஞ்ஞானி நேற்று யாழ். விஜயம்

பிரிட்டனின் அணு விஞ்ஞானியும் பௌதீகவியல் பேராசிரியருமான வின்சன்ற் ஸ்மித் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு சென்றதோடு பி.ப 12.30 மணியளவில் பரியோவான் கல்லூரியில் க.பொ.த உயர்தர மாணவர்களுடன் கலந்துரையாடினார். அதன் பின் ஐன்ஸ்டீன் வாழ்க்கை மற்றும் பௌதீகவியலில் அவருடைய புரட்சிகள் தொடர்பான விரிவுரை ஒன்றையும் நிகழ்த்தினார். இந்தக் கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் கீழ் குறிப்பிடப்படும் பொருட்களுக்கு / உபகரணங்களுக்கு தகைமையுடையோரிடம் இருந்து சீல் இடப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. தையல் மெசின்கள்
2. நீர் இறைக்கும் இயந்திரங்கள் - எரிபொருள்
3. நீர் இறைக்கும் இயந்திரங்கள் - மின்சாரம்
4. தெளி கருவிகள் - 16 லீற்றர்
5. மீன்பிடி வலைகள்
6. துவிச்சக்கர வண்டிகள் - ஆண்கள்
7. துவிச்சக்கர வண்டிகள் - பெண்

விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இப்பொருட்களை / உபகரணங்களை விற்பனை செய்வதற்கான அங்கீகாரம் வியாபார பெயர் பதிவு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 14.11.2014 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து 28.11.2014 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணி வரை காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா.1000/- கட்டணமாக செலுத்தி விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மூடி சீல் வைக்கப்பட்ட விலைக் கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 01.12.2014 திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் திட்டமிடல் கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 01.12.2014 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவாதனதாகும்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்கஅதிபர் / மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C/3596)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

**சீட்டிழுப்பு இல. 2580 திகதி 12-11-2014**

ஆங்கில எழுத்து: I

வெற்றி எண்கள்: **27 46 63 69**

போனஸ் இல: **19**

ஜக்பொட் பரிசு ரூ. **17,810,000/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 225886 | 20/- | 4,517,720/- |
| 2 இல | 16112 | 100/- | 1,611,200/- |
| 3 இல | 342 | 1,000/- | 342,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9128 | 40/- | 365,120/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 652 | 1,000/- | 652,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,810,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 10805 | 100/- | 1,080,500/- |
| 2 இல + போனஸ் இல | 508 | 500/- | 254,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 422 | 200/- | 84,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 263895 | | 10,461,440/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.11.15 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
**ரூ. 18,426,500/-**

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3587)


# வேலணை பிரதேச சபை

## 2015 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத் தரிப்பிடங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பனவற்றை 01.1.2015 தொடக்கம் 31.12.2015 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 14.11.2014 தொடக்கம் 01.12.2014 பி.ப. 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 03.12.2014 மதியம் 12.00 வரை
கேள்வி திறக்கும் திகதி : 03.12.2014 பிற்பகல் 12.30 மணி

| இல | சந்தை பெயர் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT தவிர்த்து) | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT தவிர்த்து) |
|---|---|---|---|---|
| 01 | துறையூர் மீன் சந்தை - வேலணை | 1,000.00 | 10,000.00 | 220,000.00 |
| 02 | செட்டிபுலம் மீன் சந்தை - வேலணை | 500.00 | 5,000.00 | 39,748.50 |
| 03 | சரவணை மீன் சந்தை - வேலணை | 500.00 | 2,000.00 | 6,600.00 |
| 04 | அம்பிகை நகர் மீன் சந்தை - வேலணை | 500.00 | 5,000.00 | 11,000.00 |
| 05 | அல்லைப்பிட்டி மீன் சந்தை அல்லைப் பிட்டி | 500.00 | 5,000.00 | 58,300.00 |
| 06 | மடத்துவெளி மீன் சந்தை - புங்குடுதீவு | 1,000.00 | 10,000.00 | 229,658.00 |
| 07 | நயினாதீவு வடக்கு மீன்சந்தை நயினாதீவு | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 08 | நயினாதீவு தெற்கு மீன்சந்தை - நயினாதீவு | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 09 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக்கடை - புங்குடுதீவு | 1,000.00 | 10,000.00 | 220,000.00 |
| 10 | வேலணை சாட்டி கடற்கரை வாகனத் தரிப்பிடம் | 1,000.00 | 10,000.00 | 187,000.00 |
| 11 | சாட்டி சிற்றுண்டிச்சாலை - வேலணை | 500.00 | 2,000.00 | 6,000.00 |
| 12 | புங்குடுதீவு மடத்துவெளி இளைப்பாற்று மண்டபமும், சிற்றுண்டிச்சாலையும் | 500.00 | 5,000.00 | 13,311.00 |
| 13 | வேலணை துறையூர் கடை இல.04 கருவாட்டுக் கடை | 500.00 | 5,000.00 | 34,760.00 |
| 14 | வேலணை துறையூர் கடை இல.05 கருவாட்டுக் கடை | 500.00 | 5,000.00 | 34,760.00 |
| 15 | வேலணை துறையூர் கடை இல.06 கோழிக் கடை | 500.00 | 5,000.00 | 33,715.00 |
| 16 | வேலணை துறையூர் கடை இல.07 ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 33,770.00 |
| 17 | வேலணை துறையூர் கடை இல.02 | 500.00 | 5,000.00 | 31,600.00 |

| இல | சந்தை பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT தவிர்த்து) | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT தவிர்த்து) |
|---|---|---|---|---|---|
| 01 | வேலணை துறையூர் கடை இல.03 சிற்றுண்டிச்சாலை | 1,500.00 | 1000.00 | 10,000.00 | 180,000.00 |

- கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், வேலணை பிரதேசசபை, வேலணை"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும், அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.
- ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
- கேள்விப்படிவக் கட்டணம் கேள்வித் தொகை என்பவற்றுக்கு 12% (Vat) பெறுமதி சேர் வரி செலுத்தப்படல் வேண்டும்.
- கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
- தெரிவு செய்யப்படும் இறைச்சிக் கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும், ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 2014.12.15 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
- கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
- புங்குடுதீவு மடத்துவெளி மீன் சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டு வரப்படும் மீன்களுக்கு சந்தைவரி தவிர்த்தே அறவிடப்பட வேண்டும்.
- சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன், கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இட வேண்டும்.
- சந்தைக் கடைகளுக்கான மின்சாரக் கட்டணம் குத்தகைதாரர்களினால் மாதாந்தம் மின்சார சபையில் செலுத்தப்படல் வேண்டும்.
- வாகனத் தரிப்பிடங்களில் வேலணை பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களையே பற்றுச்சீட்டு வழங்கி அறவிட வேண்டும். மேலும் இலங்கை போக்குவரத்துச் சபை அரச முத்திரை பொறிக்கப்பட்ட வாகனங்கள் தவிர்த்தே வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும்.
- கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வேலணை பிரதேசசபை,**
**வேலணை.**
**2014.11.13**

(C/3597)

**சின்னையா சிவராசா,**
**தவிசாளர்,**
**பிரதேசசபை, வேலணை.**

# வயிற்றோட்டம், காய்ச்சலால் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

## போதனா வைத்தியசாலைபிரதிப் பணிப்பாளர் தகவல்



(யாழ்ப்பாணம்)

மாசுபட்ட குடிநீர் மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்களாலும் வயிற்றோட்டம், காய்ச்சல் போன்றவற்றால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் தொகை தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வயிற்றோட்டம் மற்றும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் தொகை கடநத ஒன்றரை மாதங்களாக தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டே செல்கிறது. முன்னர் தினமும் 5 அல்லது 6 பேரே அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் தற்போது தினமும் 10 முதல் 15 பேர் வரையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இதுமட்டுமல்லாது வெளிநோயாளர் பிரிவில் வயிற்றோட்டம், காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் தொகையும் வெகுவாக அதிகரித்துள்ளது.

இந்நோய்த் தாக்கத்தில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதுடன் யாழ்ப்பாணத்து குடிநீர் மாசுபட்டுள்ளதாக சுகாதார திணைக்களத்தின் அறிக்கை தெரிவித்துள்ள நிலையில், கொதித்தாறிய மற்றும் வடிகட்டிய குடிநீரைப் பயன்படுத்துவதுடன் நோய்த்தாக்கத்திற்கு ஆளாகும் பட்சத்தில் உடனடியாக சிகிச்சை பெறுவது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ, 25)

# கட்டாக்காலி மாடுகளால் அழிவடையும் நெற்பயிர்கள்

(யாழ்ப்பாணம்)

பருவமழை இன்றி நெற்பயிரை மிக கஷ்ரப்பட்டு பராமரித்து வரும் வேளையில் கட்டாக்காலி மாடுகளால் அப்பயிர்கள் அழிக்கப்படுவதாக சாவகச்சேரி விளைவேலிப் பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மழையின்றி வயல்களில் நீர்த்தன்மை அற்று பனித்தண்ணீரில் உயிர்வாழும் நெற்பயிர்களை பெரும் செலவு செய்து ஓரளவுக்கு பயிர்களாக வளர்த்துள்ள நிலையில் கட்டாக்காலி மாடுகளினால் அப்பயிர்கள் அழிக்கப்படுகின்றன.

இரவு வேளைகளில் நுணாவில் பகுதியில் இருந்து வரும் கட்டாக்காலிகள் நெற்பயிரை மேய்கின்றன. இதனால் எதிர்காலத்தில் தாம் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும், இதனைத் தடுக்க இப்பகுதி கிராம சேவகரோ, அல்லது கமக்காரர் அமைப்பினரோ எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இக்கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விளைவேலி பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)


## நூல் அறிமுக நிகழ்வு

உயில் கலை இலக்கிய சங்கம் - சித்தம் அழகியார் ஏற்பாட்டில் பொ. கருணாகரமூர்த்தியின் இரண்டு நூல்கள் அறிமுக நிகழ்வும் உரையாடலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை, பிற்பகல் 3.30 மணிக்கு "ஞானாலயம்", 117 வி.எம்.றோட் பருத்தித்துறை என்னும் முகவரியில் இடம்பெற வுள்ளது.

இவ் அறிமுக நிகழ்வில் உரைகளை க.அருந்தாகரன், ஜி.ரி கேதாரநாதன் ஆகியோர் வழங்கவுள்ளார்கள். ஏற்புரையினை பொ.கருணாகர் மூர்த்தி வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில், இலக்கிய ஆர்வலர்களையும் நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (63)

# யாழ். பொது நூலகத்திற்கு நூல்கள் கையளிப்பு




(யாழ்ப்பாணம்)

சுவர்ணபுர விருது பெற்ற யாழ். பொதுநூலகத்திற்கு யாழ். இந்திய துணைத்தூதரகத்தினால் ஒரு தொகுதி நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நூல்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ். இந்திய பிரதித் துணைத்தூதுவர் எஸ்.டி.மூர்த்தி, பொது நூலக பிரதம நூலகர் திருமதி சதாசிவ மூர்த்தியிடம் நூல்களை கையளித்தார்.

# தமிழ் அரசியலில் ஏகப்பிரதிநிதித்துவக் காய்ச்சல் - 02



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய முடியாது என்று சம்மந்தன் தலைமையிலான தமிழரசுக்கட்சி பகிரங்கமாகவே சொல்லி வருகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஏனைய கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ், புளட், ரெலோ ஆகியவற்றை உள்ளடக்கித் தேர்தலில் களமிறங்கவும் பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றம் போன்றவற்றில் அங்கத்துவம் பெறவும் தயாரான தமிழரசுக்கட்சியினருக்கு இந்தக் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டமைப்பைப் பதிவு செய்ய மனம் வரவில்லை.

இந்தத் தவறை மறுத்துப் பேசுவதற்கு தமிழரசுக்கட்சியில் யாருமே இல்லை.

அந்தக் கட்சியில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், மாகாணசபையின் அவைத்தலைவராக இருக்கிற சி.வீ.கே.சிவஞானம், வடமாகாண முதலமைச்சரும் நீதியரசருமான விக்கினேஸ்வரன், மூத்த அரசியல்வாதியான மாவை சேனாதிராஜா, சுடர் ஒளி, உதயன் ஆகிய பத்திரிகைகளின் உரிமையாளரும் நிர்வாக இயக்குநருமான சரவணபவன், பிரபல சட்டத்தரணியான சுமந்திரன், கல்வியியலாளர் வல்வை அனந்தராஜ் போன்ற பலர் இருக்கிறார்கள்.

ஆனால், இந்த ஜனநாயக மறுப்பைப்பற்றி யாருமே வாய்திறப்பதில்லை.

இவர்களும் சேர்ந்துதான் இந்த ஜனநாயக மீறலைச் செய்கிறார்கள்.

இதுவரையில் இந்த ஜனநாயக மீறலைப்பற்றி இதுவரையில் சரவணபவனின் பத்திரிகைகள் கூட ஏதும் பேசியதில்லை.

பிற தரப்பினரின் ஜனநாயக மீறல்களைப் பற்றியும் உரிமை மறுப்புகளைப் பற்றியும் புறக்கணிப்பைப் பற்றியும் சத்தம்போட்டுக் கூச்சலிடும் இவர்களும் இவர்களுடைய ஊடகங்களும் இந்த அநீதியைப்பற்றி மௌனம் காப்பது ஏன்?

ஏனைய தமிழ் ஊடகங்கள் கூட தமிழரசுக்கட்சியின் இந்த ஏதேச்சாதிகாரத்தைப்பற்றிப் பேசுவதில்லை.

இந்த நிலை தமிழரசுக்கட்சியை மேலும் தவறு செய்வதற்கே வழி வகுக்கின்றது.

இதேவேளை தமிழரசுக்கட்சியை வளர்ப்பதற்கே தமிழ்ச்சமூகம் கடுமையாகப் பாடுபடுகிறது.

தமிழரசுக்கட்சியின் உருவாக்கமே இப்படித்தான் நிகழ்ந்தது.

தமிழ்க்காங்கிரஸை எதிர்த்து, அதைக் குற்றம்சாட்டி நிராகரித்தவாறே தமிழரசுக்கட்சி உருவாகியது.

பிறகு அதற்குச் சவாலாக இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இடதுசாரி அமைப்புகள் போன்றவற்றையும் அது துரோகப்பட்டியலில் இணைத்து நிராகரித்தது.

இந்தக் கட்சிகளிலும் அமைப்புகளிலும் இணைந்து செயற்பட்டோரைத் துரோகிகள் என்ற புனைந்து மக்களுக்குக் காண்பித்தது.

இது அரசியல் நாகரீகத்துக்கும் ஜனநாயகத்துக்கும் உரிமைகளுக்கும் பன்மைத்துவத்துக்கும் எதிரான ஒன்றாகும்.

ஆனால், இதைப்பற்றி தமிழரசுக்கட்சியை ஆதரித்த எவரும் என்றும் கேள்வி எழுப்பியதில்லை.

இப்படிக் கேள்வி எழுப்பாமலே தமிழர்கள் தங்கள் ஜனநாயக அடித்தளத்தை இழந்தனர்.

தமிழரசுக்கட்சி உருவாக்கிய ஏதேச்சாதிகாரத்தையே பின்னாளில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆதிக்கமனோபாவம் உள்ள அமைப்புகள் கொண்டிருந்தன. அதிகம் ஏன் – இப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேணும். ஜனநாயக அடிப்படையில் ஏனைய கட்சிகளுக்குரிய இடத்தை வழங்க வேண்டும் என்று நியாயமாகக் குரல் எழுப்புகின்ற சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தாமே [தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே] என்றுதான் சொல்கிறார்.

இவரையும் இவருடைய கட்சியையும் தமிழரசுக்கட்சியினர் புறக்கணித்தும் ஓரங்கட்டியும் வருகின்றனர். ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்களை தான் என்றும் மதித்ததில்லை என்று அண்மையில் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தரும் வடமாகாணசபையின் முதலமைச்சருமான விக்கினேஸ்வரன் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

விக்கினேஸ்வரன் இதற்காக மன்னிப்புக் கோர வேணும். தேர்தலில் அனைத்துத் தரப்பின் ஆதரவையும் கேட்டுப்பெற்றவர் இப்பொழுது இப்படிக் கதைக்கலாமா என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் போர்க்கொடி தூக்கியதும் பகிரங்கமானது.

தாம் சார்ந்தவர்களே தம்மைப் புறக்கணிப்பதையும் ஓரங்கட்டுவதையும் புரிந்தும் புரியா-மலும் இருக்கிறாரா சுரேஸ்?

தம்மைச் சார்ந்தவர்களே தம்மை ஏற்றுக்கொள்ளாமல் அவமதித்துப் புறக்கணிக்கும்போது, ஏனையவர்களைப் புறக்கணிக்க முனைகிறார் சுரேஸ்.

என்ன வேடிக்கையப்பா இது?

என்ன மடத்தனம் இது? பெரும்பாலான தமிழர்களிடம் இந்த ஏதேச்சாதிகார மனோபாவமும் ஆதிக்க வெறியும் மற்றவர்களைப் புறக்கணிப்பதும் ஜனநாயக விரோதப்போக்கும் தாராளமாக உண்டு.

அதாவது கறுப்பு வெள்ளை மனோநிலையில்தான் ஒவ்வொருவரும் இருக்கின்றனர்.

சும்மா பேச்சுக்கும் வெளிச் சூழலுக்கும் தோதாக ஜனநாயகத்தைப்பற்றியும் உரிமைகளைப்பற்றியும் நீதி நியாயத்தைப்பற்றியும் பேசிக்கொள்வார்கள்.

இதனால்தான் தமிழர்கள் இன்னும் சுடுகாட்டில் நிற்க வேண்டியிருக்கிறது.

சுடுகாட்டின் சாம்பல்தான் தமிழர்களுடைய சாம்பல் அரசியலாகும்.

மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு
பலவீனமே மரணம். - விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live:com
Online : www.emurasu.com

## இன்று நீரிழிவு நோய் தினம்

இன்றைய மனிதனின் வாழ்க்கைப் போராட்டம் என்பது பல்வேறு நோய்களோடு அவன் போராட வேண்டியிருப்பதும் சேர்ந்ததே. சுற்றுச்சூழலை, உண்ணும் உணவை, குடிக்கும் நீரை, மூச்சினுள் செல்லும் காற்றை எல்லாம் நஞ்சூட்டிக் கொண்டிருக்கும் மனிதனுக்கு, உணவே மருந்து என்ற காலம் போய் இன்று மருந்தே உணவு என்று ஆகிவிட்டது.

வருடத்தில் பாதி நாட்களுக்கு நோய்களின் தினம் கொண்டாட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. புற்று நோய்க்கு, இதய நோய்க்கு, மூளைக் காய்ச்சலுக்கு, வாந்தி பேதிக்கென்றெல்லாம் நாள்களை ஒதுக்கி, அவை பற்றிய விசேட கவனம் எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையில் மனிதகுலம் இருக்கிறது. இன்று உலக நீரிழிவு தினமாகும்.

உலகில் காணப்படும் ஆட்கொல்லி நோய்களில் நீரிழிவு நோயும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் இந்நோய் தொடர்பான விழிப்புணர்வு நம்மிடையே போதியளவு காணப்படாத போதிலும் தற்போது அந்நிலை மாற்றமடைந்து வருகின்றது. நீரிழிவு நோயின் வகைகள் தொடர்பிலும் அதனை எவ்வாறு தடுக்கலாம் என்பது தொடர்பிலும் இப்போது நாம் நிறையவே அறிந்துகொண்டிருக்கிறோம்.

மனிதனுக்கு தேவையான இன்சுலினை உடல் உற்பத்தி செய்யாத அல்லது உற்பத்தி செய்த இன்சுலினைப் பலனளிக்கும் விதத்தில் பயன்படுத்த இயலாத நிலைமையே நீரிழிவு நோய் எனப்படுகிறது.

அதாவது மனித உடம்பில் சீனிப்பொருளை உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்றுவதற்கு இன்சுலின் என்ற நொதியம் அவசியமாகிறது. இந்த இன்சுலின் நொதியம் சரியாக செயற்படவில்லை எனில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரித்து இரத்த அழுத்தம் மற்றும் இதயத்திற்கு இரத்தம் சரிவர செல்லாமல் இருதயத்தில் அடைப்பு போன்றவைகள் வருவதற்கு காரணமாகிறது.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 50 சதவீதத்தினர் இதயம் சம்பந்தப்பட்ட நோய்களாலும், பக்கவாதம் போன்ற நோய்களாலுமே இறப்பைத் தழுவ நேரிடுகின்றது. இரண்டு சதவீதமானவர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டு 15 வருடங்களின் பின்னர் தமது பார்வையை இழக்கிறார்கள். 10 வீதமானவர்கள் பார்வைக் குறைபாடுகளுக்கு முகங்கொடுக்கின்றனர். 10 – 20 சதவீதமானவர்கள் சிறுநீரக கோளாறு ஏற்பட்டு இறக்கின்றனர்.

உலகம் முழுவதும் சுமார் 366 மில்லியன் பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நீரிழிவு ஸ்தாபனம் தெரிவிக்கிறது. வருடாந்தம் 4.6 மில்லியன் பேர் இதனால் உயிரிழக்கின்றனர். அதாவது 7 விநாடிக்கு ஒருவர் வீதம் இந்நோயினால் மரணிக்கின்றனர்.

உலக அளவில் இந்நோய் பாதிப்புக்குள்ளாகியிருப்பவர்களில் இந்தியர்களே முதலிடம் பிடித்துள்ளனர். உலக நீரிழிவு நோய் நிறுவனத்தின் அறிக்கையின் படி சுமார் 50.8 மில்லியன் நோயாளிகள் இந்தியாவில் உள்ளனர்.

இரண்டாமிடத்தில் சீனாவும் (43.2 மில்லியன்) மூன்றாவதாக அமெரிக்காவில் (26.8 மில்லியன்) நோயாளிகள் நீரிழிவு நோயுடன் உள்ளனர். இலங்கையில் பத்து சதவீதம் பேர் நீரிழிவு நோய்ப் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நோயைக் கட்டுப்படுத்த இன்சுலின் ஊசி மற்றும் மாத்திரைகள் பாவிக்கப்படுகின்றன. இதுதவிர, உடற்பயிற்சி மூலம் உடல் எடையைக் குறைத்துக் கொள்வதும் அவசியமாகும். நடனமாடுதல் மிகச் சிறந்த பலனளிப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

- ஆசிரியர்



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2014

“கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்”

—— இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# சிதறுண்டு போயுள்ளது எதிர்க்கட்சி

# வெற்றிவாய்ப்பு ஜனாதிபதிக்கே

## என்கிறார் அமைச்சர் டளஸ்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் சிதறுண்டு காணப்படுவதால் எதிர்வரும் தேர்தல்களில் ஜனாதிபதி தலைமையிலான ஆளுங்கட்சியே வெற்றிபெறுமென அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் செல்வாக்கு சரிந்து செல்வது தான் வழக்கம். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. எதிர்க்கட்சிகள் தான் நாளுக்கு நாள் செல்வாக்கை இழந்து வருகின்றன.

எதிர்க்கட்சிகள் இன்று சிதறுண்டு போயுள்ளன. ஆளுங்கட்சிக்கு எதிராக தகுதியான வேட்பாளர் ஒருவரை நிறுத்தக் கூட வழியற்று எதிர்க்கட்சிகள் தள்ளாடிக்கொண்டிருக்கின்றன.

எனவே எதிர்வரும் தேர்தல்களிலும் ஆளுங்கட்சியின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது என்றும், அமைச்சர் டளஸ் அழகப்பெரும தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

# அதிகரிக்கும் தொற்றாநோய்கள்

# வருடாந்தம் 30 ஆயிரம் பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் தொற்றா நோய்களால் வருடாந்தம் 30,000 பேர் மரணிக்கின்றனர் என்றும்

சிகரட் பாவனை மூலம் ஒரு நாளைக்கு 25 இற்கும் 30 இற்கும் இடைப்பட்டோர் மரணிப்பதுடன் 21;000 இற்கும் மேற்பட்டோர் வருடாந்தம் மரணிப்பதாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் தொற்றா நோய்களுக்கு பலியானோரின் எண்ணிக்கை 72 வீதமாகும். உலகில் அமெரிக்காவில் தான் கூடுதலான புற்றுநோயாளர்கள் உள்ளனர்.

இலங்கை சுகாதாரத்துறையில் வேகமாக வளர்ச்சி கண்டு வருகிறது. நாட்டின் புற்றுநோயாளர் எண்ணிக்கையும் வேகமாக அதிகரிக்கிறது. புற்றுநோயை மட்டுமன்றி, போதைப் பொருள் பயன்பாடு, புகைப்பிடித்தல் இவற்றை எல்லாம் சமூகத்திலிருந்து நிராகரிப்பதற்கு நாம் பாடுபட வேண்டும்.

வெற்றிலை தொடர்பாக மக்களை பரவலாக அறிவூட்ட வேண்டும். பல்வேறு தொற்றாநோய்களால் ஏராளமானோர் பீடிக்கப்பட்டு மரணிக்கின்றனர்.

மக்களைப் பாதுகாக்க வேலைத் திட்டத்தை அமுலாக்குவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# புதிய பிறப்புச்சான்றிதழுடன்

# ஐ.தே.க.போட்டியிடும் நிலை

## அமைச்சர் அளுத்கமகே தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி தமது பெயரையும் சிறிகொத்த தலைமையகத்தையும் மாற்றி புதிய பிறப்புச் சான்றிதழுடன் அடுத்த தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்படுமென்று விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போது சகல அரசியல் கட்சிகளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆட்சியில் அமர்த்துவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ள இவ்வேளையில், அதனைத் தடுக்க எந்தக் கட்சியோ, தனி நபரோ இந்நாட்டில் இல்லையென்று தெரிவித்தார்.

எனவே எதிர்க்கட்சியினர் வெளிநாட்டு அழுத்தங்களுக்கும் டொலர் நோட்டுக்களுக்கும் அடிமையாகி இந்நாட்டை அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலைக்கு கொண்டு வருவதே இவர்களின் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இரட்டை குடியுரிமை யாருக்கு

# விளக்குகிறார் விஜித ஹேரத்

அரசாங்கம் தமக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் இரட்டைக் குடியுரிமையை வழங்க முயற்சிப்பதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

வதியாதோர் வெளிநாட்டு வங்கிக் கணக்கின் வட்டி வீதம் குறைந்துள்ளது. இது நிதியமைச்சுக்குரிய விடயம் அல்ல என்ற போதிலும் வெளிநாட்டில் தொழில் புரிவோர் சம்பந்தப்பட்ட விடயம என்பதால் நிதியமைச்சு இந்த விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தில் வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கை பிரஜை சுங்க வரியின்றி வாகனம் ஒன்றை கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதனை செயற்படுத்தும் கட்டமைப்பு குறித்து தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் செயற்படுத்தும் விதம் பற்றியும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### சிறுவர்களுக்கான செயலமர்வு

வண்ணத்துப்பூச்சிகளின் இறக்கைகளை பலப்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் அமைந்துள்ள, சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி வவுனியா பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாலை 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இச்செயலமர்வில், வளவாளராக உளநல மருத்துவர் எஸ். சிவதாஸ் கலந்துகொள்வார் என வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா தெரிவித்தார்.

# நவீன முறைகளை கையாளல் குறித்து சிகையலங்கரிப்பாளர்களிற்கு பயிற்சி



(யாழ்ப்பாணம்)

சிகை அலங்கரிப்பாளர்கள் நவீன முறைகளைக் கையாண்டு தொழிலில் தேர்ச்சிபெறுவதுடன் வருமானத்தையும் அதிகரிக்கும் வகையில் சிறிய தொழில் முயற்சிகளையும் விவசாய உற்பத்தி திறனையும் மேம்படுத்தல் எனும் செயற்றிட்டத்தில் யு.எஸ்.எயிட்டின் நிதியுதவியுடன் நியூ கிளியஸ் பவுண்டேசன் நேற்றுமுன்தினம் சிகையலங்கரிப்பாளர்களுக்கு பயிற்சி நெறி ஒன்றினை நடாத்தியது.

வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் இடம்பெற்ற இந்த முழுநாள் பயிற்சி நெறியில் 60 இற்கும் மேற்பட்ட சிகையலங்கரிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

சிகை அலங்கரிப்பாளர் ஒன்றியத்தின தலைவர் என்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் சிகை அலங்கரிப்பு துறையில் பட்டம் பெற்று என்.வி.கியூ-4 தரச் சான்றிதழ் பெற்ற, பயிற்றுவிப்பாளர் திலக் டி சில்வா கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள 7 சிகையலங்கரிப்பாளர் சங்கங்களில் இருந்து 60 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் உள்ள 877 சிகையலங்கரிப்பு நிலையங்களில் முதற்கட்ட பயிற்சிக்காக 60 பேர் அழைக்கப்பட்ட நிலையில் மிகுதிப்பேருக்கு அடுத்த அடுத்த கட்டங்களாக பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் இயங்காத நிலையிலுள்ள வடமராட்சி கிழக்கு சங்கம் விரைவில் இயங்கும் எனவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இச் செயலமர்வின் போது ஒன்றியத்தின் தலைவர் எம்.பிரபாகரன் தெரிவித்தார். (இ)



ஊரெழு மேற்கு பகுதியில் வசதி குறைந்த குடிசையில் வாழ்ந்து வந்த குடும்பம் ஒன்றுக்கு கொடையாளி ஒருவரால் வழங்கப்பட்ட குடிசைக்கான தகரங்களை ஊரெழு மேற்கு கிராம சேவையாளர் கோ.ஜெயந்திரன் வழங்குவதைக் காணலாம். (08)

# ஊர்காவற்றுறை பிரதேச சபையின் புத்தக கண்காட்சியும் விற்பனையும்

(ஊர்காவற்றுறை)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேசசபையின் ஏற்பாட்டில் திறந்தவெளி புத்தக கண்காட்சியும் மாபெரும் புத்தக விற்பனையும் மற்றும் புத்தக அஞ்சல் ஓட்டத்துடன் விழிப்புணர்வு சித்திரப் போட்டியும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரன்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் திருமதி.ரி.மேரிடொறின், இலங்கை வங்கி ஊர்காவற்றுறை முகாமையாளர் றெஜி கோல்ட் எட்வேட், ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சரத்சந்திரா, ஊர்காவற்றுறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ப.சுதாகர், ஊர்காவற்றுறை சம்பத்வங்கி முகாமையாளர் யு.அகிலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.அன்னை புத்தகசாலை எஸ்.விஜிதரன், ஊர்காவற்றுறை டினோசன் பல்பொருள் வாணிபம், இ.மரியதாசன் மற்றும் வர்த்தகர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# உலர் உணவுப்பொருட்கள் வழங்கல்

(அச்சுவேலி)

தொண்டமானாறு கெருடாவில் நற்பணி மன்றத்தினர் அக்கிராமத்தில் உள்ள வருமானம் குறைந்த 75 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கவுள்ளனர்.

இக்கிராமத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்து வாழும் அன்பர்களினால் உருவாக்கப்பட்ட சுவிஸ் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கெருடாவில் தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து இப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (85)

# நாடகப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)


சுழிபுரத்திலுள்ள காவேரி கலா மன்றத்தின் அரங்காற்றுகை குழுவினரது சமுதாய நாடக குழுக்களுக்கிடையிலான போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12.00 மணிவரை நடைபெற்றது.

இப் போட்டியில். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து வருகை தந்த சமுதாய நாடகக்குழுக்கள் கலந்து கொண்டனர்.

முதல் மூன்று இடங்களை பெற்ற குழுக்களுக்கு அன்று மாலையில் நடைபெற்ற ஆண்டு விழாவில் சான்றிதழும், காசோலையும் வழங்கப்பட்டது.

காவேரி கலாமன்றமானது அரங்க ஆற்றுகை ஊடாக மக்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (90)

# மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்.கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பபாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சி.ரிசாந் - 164, சு.சஞ்சுதன் - 168, வி.கம்ஷி - 172, லி.கஜானி - 177, ம.தர்சிகா - 163, கே.நேருஜா - 158, இ.திலக்ஷன் - 167, சி.ரிசானா - 165, ற.ஆகாஸ் - 164, ந.ஆரதி - 184 ஆகியோர். சித்தியடைந்துள்ளனர். அத்துடன் 100 புள்ளிகளுக்கு மேல் 37 மாணவர்களும், 70 புள்ளிகளுக்கு மேல் 47 மாணவர்களும் பெற்றுள்ளனர். இம்மாணவர்களையும், இவர்களுக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களையும் பாடசாலை சமூகத்தினர் பாராட்டியுள்ளனர். (02)

# வளலாய் - இராசவீதியூடாக புதியபேருந்து சேவை

(அச்சுவேலி)

வளலாய் சந்தியிலிருந்து இராச வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கான புதிய பேருந்து சேவை ஒன்றை அச்சுவேலி தனியார் பேருந்து சங்கத்தினர் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

முன்னர் வளலாயிலிருந்து பருத்தித்துறை வீதியூடாக சேவையினை மேற்கொண்டு வந்த நிலையில் தற்போது இராச வீதியூடான புதிய மார்க்க சேவையினை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலை, நண்பகல், பிற்பகல் என மூன்று வேளை சேவை இடம்பெறும் இந்தப் பேருந்து வளலாய் சந்தியிலிருந்து விமான நிலைய வீதியூடாக தம்பாலை சந்நிதி வீதி வழியாக அச்சுவேலி பேருந்து தரிப்பிடம் சென்று அங்கிருந்து இராச வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி செல்லும். (85)

# கலந்துரையாடல் திகதிகள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அலரிமாளிகையில் மத்தியஸ்த சபை உறுப்பினர் களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி வரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இந்நிகழ்வுக்கு உறுப்பினர்கள் செல்லவேண்டியிருப்பதால் கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையில் 17 ஆம் திகதி ஞாயிறு நடைபெறவிருந்த பிணக்க சம்மந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபை தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித் துள்ளார். (08)

# சிறுவர்பாதுகாப்பு அதிகாரசபையால் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

(கிளிநொச்சி)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் சிறுவர் பாதுகாப்பு,சிறுவர் பொறுப்பு கடமை தொடர்பான விழிப்புணர்வை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஊற்றுப்புலம் அரசினர் தமிழ்க கலவன் பாடசாலையில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை பிற்பகல் 1 மணி முதல் மாலை 4 மணி வரையும் விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இராஜரட்ணம் துஸ்யந்தன் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் மகேசன் உமாசங்கர் தலைமை தாங்கினார். இப் பாடசாலையில் உள்ள 100 மாணவர்கள் இதில் பங்கு கொண்டனர்.

சிறுவர் பெண்கள் விவகார அமைச்சு இந்த வேலைத் திட்டத்திற்கான நிதியை வழங்கியுள்ளது. (90)

# ஆளும்கட்சியில் இணைவதென்ற செய்தியை மறுக்கும் மங்கள



எந்தக் காரணத்திற்காகவும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக்கொள்வதாக ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து சிங்கள ஊடகமொன்று மங்கள சமரவீரவிடம் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அமைச்சுப் பதவி ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நான் ஆளும் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை.

அரசாங்கத்தின் எந்தவொரு அமைச்சரும் என்னை சந்தித்து பேசவில்லை.

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்.

சில ஊடகங்கள் அண்மைய நாட்களில் எவ்வித அடிப்படையுமின்றி என்னைப்பற்றி அவதூறு செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

# போரை வெற்றி கொண்டதற்கு நிறைவேற்று அதிகாரமே துணை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்திருந்தால் ஒருநாளும் போரை வென்றிருக்க முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.



நாட்டில் மீண்டும் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகள் நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்யுமாறு கோரி வருவதாக அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச செயலாளருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பாரியளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. நகரங்களுக்கு மட்டுமன்றி கிராமங்களுக்கும் அபிவிருத்தி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த நாட்டு மக்களுக்கு நிறைவேற்று அதிகாரம் பிரச்சினையில்லை.

நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்யுமாறு எதிர்க்கட்சிகள எழுப்பி வரும் கோசம் மிகவும் பலவீனமானது. இன்று நாட்டில் சிந்திக்கக் கூடிய வாக்காளர்களே இருக்கின்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் முக்கியமான ஓர் அரசியல் கட்சியாகும். எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் யானைச் சின்னத்தில் ஒரு வேட்பாளரை அவர்களால் நியமிக்க முடியவில்லை.

2010ஆம் ஆண்டில் கரு ஜயசூரிய 17 பேருடன் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார். பின்னர் அவர் எதிர்க்கட்சிக்கு தனியாகவே சென்றார். நல்ல தலைவராக இருந்திருந தால் கரு ஜயசூரியவிற்கு தனியே சென்றிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. எதிர்க்கட்சியின் பொது வேட்பாளர் இதுவரை யில் தெரிவாகவில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே இந்த நாட்டின் சிறந்த பொது வேட்பாளர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

# மீனவர்களின் படகுகளுக்கு செய்மதி கண்காணிப்பு கருவி


மீனவர்களின் படகுகளுக்கு செய்மதி கண்காணிப்பு கட்டமைப்பை பொருத்துவதற்காக டென்மார்க் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது

ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் 3 ஆயிரம் படகுகளுக்கு அடுத்த வருடம் இந்த தொழில்நுட்பத்தை பெற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரி யல்வள அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்து சமுத்திரத்தின் டுனா ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைக்கு அமைய பொருத்தப்படவுள்ள இந்த கட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கை கடற்றொழில் அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தலைமையில் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

மீனவ படகுகளுக்கு இந்த கண்காணிப்பு கட்டமைப்பை பொருத்துவதன் மூலம் அவற்றின் நகர்வினை கண்காணிக்க முடியும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன இதன்போது தெரரிவித்தார்.

# சிறுபான்மை கட்சித் தலைவர்களை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா சிறுபான்மை கட்சித் தலைவர்களை சந்தித்து விசேட பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரை அவர் சந்தித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடாத்தப்பட்டுள்ளது.

ரவூப் ஹக்கீம் மற்றும் இரா. சம்பந்தன் ஆகியோருக்கு இந்திய உயர்ஸ்தானிகர் அவசர அழைப்பு விடுத்து இந்தச் சந்திப்பை நடாத்தியதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகருக்கு இடையிலான சந்திப்பு சுமார் மூன்று மணித்தியாலத்திற்கு மேல் நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், என்ன விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் பேசப்பட்டது என்ற தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ உத்தியோகபூர்வமாக எந்தவிதமான அறிக்கைகளையோ தகவல்களையோ வெளியிடவில்லை.

# நீதித்துறையில் முன்னேற்றம் சீனக்குழுவிடம் ஹக்கீம் எடுத்துரைப்பு




நாட்டில் ஏற்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைக்களோடு இணைந்ததாக நீதித்துறையும் முன்னேற்றம் கண்டு வருவதாக நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவுப் ஹக்கீம், சீன உயர்நீதிமன்றத்தில் நிறைவேற்று உதவி தலைவர் நீதியரசர் ஜென் டியோங் தலைமையிலான நீதிபதிகள் அடங்கிய உயர்மட்ட தூதுக்குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் நீதியமைச்சர் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதியமைச்சர் ஹக்கீமுடன், அமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டி சில்வா, சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஏ.கே.டீ.டீ. அரந்தர அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர ஆகியோரும் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# இந்திய மீனவர்களுக்கு மன்னிப்பா? தீர்மானம் எதுவும் இல்லை

## ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் தகவல்



(சென்னை)

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து இந்திய மீனவர்கள் குறித்து இதுவரை எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐந்து மீனவர்களையும் மன்னிப்பு வழங்கி விடுவிக்கத் தயாராக இருப்பதாக, பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தெரிவித்துள்ள நிலையில் மொஹான் சமரநாயக்க இதனைத் தெரிவித்துள்ளதாக இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை போதைப் பொருள் கடத்தியதாக குற்றம்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்கள் தரப்பில் இருந்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

அதன்பின்னர் மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பிரபா கணேசன் மேன்முறையீடு செய்யாதிருந்தால் மீனவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிக்கத் தயாராகவிருப்பதாக, ஜனாதிபதி குறிப்பிட்டார் என ஊடகங் களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார்

மேலும் இது குறித்து பிரபா கணேசன் இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து இது குறித்த உத்தியோகபூர்வ செய்திகள் எதுவும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்கலை மாணவரிடையே போதைப்பொருள் பாவனை

## அமைச்சர் எஸ்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு

30 சதவீதமான பல்கலைக் கழக மாணவர்கள் போதைப் பொருட்களை பயன்படுத்தி வருவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்

பல்கலைக்கழக மாணவர்களில் 7 சதவீதத்துக்கும் குறைவான மாணவர்களே உடற்பயிற்சி உள்ளிட்ட விளையாட்டு சார்ந்த விடயங்களில் அவதானம் செலுத்துகின்றனர்.

ஆனால் 30 சதவீதமானவர்கள் கஞ்சா போதைப் பொருட்களை பயன்படுத்துகின்றனர்.

அண்மையில் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் அலுவலகத்தில் இருந்து கஞ்சா போதைப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன், சிலர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்

# அலரிமாளிகையில் கலைஞர்கள் சந்திப்பு




ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் கலைஞர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

கலாசார மற்றும் கலை விவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் பிரபல பாடக பாடகியர்- நடிக நடிகையர் திரைப்பட இயக்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

அவர்கள் மத்தியில் சென்ற ஜனாதிபதி அவர்களுடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அமைச்சர்களான டி.பி.ஏக்கநாயக்க- நிமால் சிரிபால டி சில்வா- ரோஹித்த அபேகுணவர்தன- நாடாளுமன்ற உறுப்பினர்களான மாலினி பொன்சேக்கா- திலங்க சுமதிபால- ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க உட்பட பலர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.





திவிநெகும திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலகப்பகுதியில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள், நாற்றுவகைகள் வழங்கப்பட்டபோது புலோலி கிழக்கு கிராம உத்தியோகத்தர் எஸ்.அரவிந்தகுமார் பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்றை கையளிப்ப தையும், பயனாளிகள் நாற்றுக்களை நாட்டுவதையும் காணலாம். (01)

# நுளம்பு பெருக்கத்துக்கு காரணமான ஒன்பது பேர் மீது சட்ட நடவடிக்கை



## சூழல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரணவீர தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பருவகால மழை ஆரம்பித்துள்ள நிலையில் நுளம்பு பெருக்கம் வெகுவாக அதிகரித்து டெங்கு நோய்த் தாக்கம் தலைதூக்கும் இத்தறுவாயில் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக தமது சூழலை வைத்திருந்த 9 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய சூழல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரணவீர தெரிவித்தார்.

கடந்த திங்களன்று மாத்திரம் 9 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தலா ஆயிரம் ரூபாவீதம் யாழ்.நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.இராமநாதன் வீதியில் உள்ள 4 வீடுகளின் உரிமையாளர்கள் மீதும் கொக்குவிலில் ஐவர் மீதுமே இவ்வாறு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன் வீதிகளில் குப்பைகளையும் வெற்றுப் போத்தல்களையும் வீசிய 7 பேர் மீதும் சட்டநடவடிக்கை எடுத்துள்ளோம் பருத்தித்துறை வீதியில் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியிலுள்ள 4 கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் மானிப்பாய் வீதியிலுள்ள 3 கடைகளின் உரிமையாளர்கள் மீதே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்து தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இம மாதத்தின் ஆரம்பத்தில் அதிகளவில் இவ்வாறு சுற்றுச்சுழல் மாசடைவதற்கு ஏதுவாகவும், டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாகவும் செயற்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எமக்கு கிடைக்கப் பெறும் முறைப்பாட்டை அடுத்து நாம் இவ்வாறு சுற்றுச் சூழலை மாசுபடுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சிறப்பாக இடம்பெற்ற தொழில் நுட்ப கருத்தரங்கு

யாழ்ப்பாணம் பீகாஸ் (BCAS) வளாகம் நவீன தொழில் நுட்பமும், கலைப் பயன்பாடும் பற்றிய ஒரு நாள் இலவசக் கருத்தரங்கை நடாத்தியது.

கணனி பொறியியலாளர்களான கி.யாதவராஜன், ச.திஷோபன், க.கேசிகன், பா.சபேஷன், க.உதயகுமார் ஆகியோரடங்கிய பீ காஸ் வளாக தகவல் தொழில் நுட்ப விரிவுரையாளர் குழாத்தின் வழிகாட்டலில், விரிவுரைகளும் விளக்கங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

புதிய தொழில் நுட்பங்களுக்கோர் அறிமுகம், நவீன தொடர்பாடலின் பரிணாமவளர்ச்சி, கைபேசி பயன்பாடும் பாதுகாப்பும், நவீன வாழ்வில் கணனியின் பங்கு, கணனி அமைப்பும் பிரயோகமும், சமூக வலைத் தளங்கள் பற்றிய விழிப்புணர்வு, இணையம் மூலம் படங்களைப் பகிர்தல், இணையம் வழி பொருட்கள் வாங்கல், இணையத்தின் ஊடாகப்பணக் கொடுப்பனவும் பாதுகாப்பும், தகவல் தொழில் நுட்பத்தைப் பாதுகாப்பாய் பயன்படுத்தல் போன்ற தலைப்புக்களில் விளக்கங்கள் தரப்பட்டன. இக் கருத்தரங்கில் ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு நிறைந்த பயனைப் பெற்றுக் கொண்டனர். (137)

# நவாலி மருந்தகத்தில் 502 பேருக்கு சிகிச்சை

நவாலி தெற்கு மத்திய மருந்தகத்தில் கடந்த 3 மாதத்தில் மட்டும் 502 பேர் விசேட ஆயுர்வேத இலவச சிகிச்சையை பெற்றுள்ளனர்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் வடமாகாண ஆயுள்வேத பணிப்பாளரின் அனுமதியுடன் இலவச சித்த ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை மிக சிறப்பாக இடம் பெற்று வருகின்றது.

வாரத்தில் திங்கள், வியாழக் கிழமைகளில் இடம்பெறும் மருத்துவ சிகிச்சையினை மேலும் அதிகரித்து வழங்குமாறு நவாலியில் உள்ள பொது அமைப்புக்கள் வடமாகாண சுகாதார அமைச்சரை கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

இதேவேளை மேற்படி ஆயுர்வேத மத்திய மருந்தகத்திற்கு மோட்டார் மூலம் குடிதண்ணீர் வழங்க நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு ஹேமலதா ஞாபகார்த்த ச.ச.நிலையம் வடமாகாண சுகாதார அமைச்சை கோரியுள்ளது.

# நாவலப்பிட்டி பெண் மாயம் யாழ்.பொலிஸில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

நாவலப்பிட்டியைச் சேர்ந்த வயோதிப பெண்ணொருவரை காணவில்லை என யாழ்.பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி நாவலப்பிட்டியிலிருந்து திருகோணமலைக்கு செல்வதாக நாவலப்பிட்டி வீட்டில் இருந்து சென்ற 70 வயதுடைய தங்கவேலு மாரியா என்ற வயோதிபப் பெண்ணே காணாமற் போயுள்ளார்.

இவர் குறித்த தகவல் அறிந்தால் யாழ். பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மீண்டும் இயங்கும் சனசமூக நிலையம்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் இயங்காமல் செயல் இழந்துள்ள ஊரெழு மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையம் ஊரெழு மேற்கு கிராமசேவையாளர் கோ.ஜெயந்திரனின் முயற்சியால் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்நிலையத்திற்கென வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் ஊரெழு மேற்கு கிராம சேவையாளர் கோ.ஜெயந்திரன் தலைமையில் நடைபெற்றபோது கீழ்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வை.மோகனா, உபதலைவர் க.கந்தசாமி, செயலாளர் செ.ஶ்ரீதரன், உப செயலாளர் எஸ்.தயாபரன், பொருளாளர் எஸ்.மனோகரன் என 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவும் செய்யப்பட்டது. (08)

# முரசின் இன்றைய பலன்



(14.11.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 28 ஆம் திகதி.
மரணயோகம் / சம்தமி.
ஆயிலிய நட்சத்திரம் பின்னிரவு 01.52 வரை. பின் மகம்.
இராகு காலம 10.37 - 12.07 வரை. சுபநேரம 06.07 - 07.37 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சகோதரனுடன் முரண்பாடு ஏற்படல், எதிர்பார்த்த உதவிகள் தாமதப்படும். |
| ரிஷபம் | பெற்ற கடனை அடைக்க சொத்தின் ஒரு பகுதியை விற்க எண்ணுதல், உதாசீனம் செய்ய முயன்றவரை எண்ணி மனவேதனைப்படல். |
| மிதுனம் | பிறரை நம்பிவாக்குறுதி கொடுப்பதைத் தவிர்க்கவும். போட்டிகள், மறைமுக எதிர்ப்புக்கள் சூரியனைக் கண்ட பனிபோல விலகிவிடும். |
| கடகம் | மனையாளை எதிர்த்துப் பேசாது மௌனத்தைக் கடைப்பிடித்தல், கடனை வசூலிக்க பொலிஸ் நிலையம் சென்று முறையிடல். |
| சிம்மம் | நிகழ்வில் சிறுசிறு சலப்புக்கள் நடந்தாலும் வெற்றியை தக்கவைத்தல். |
| கன்னி | உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட பாதிப்பு குறைதல். பணத்தின் பாதுகாப்பு தொடர்பில் கவனமெடுத்தல். |
| துலாம் | சுப காரியத்தில் செலவினம் அதிகரித்தல், உங்களின் பதவியைக் கைப்பற்ற மறைமுகமாகச் செயற்படும் எதிரி பற்றிய விழிப்பு அவசியம். |
| விருச்சிகம் | பொருளாதார நிலை மனதை வருத்தும், கால் நடைகளுக்கு ஏற்பட்ட நோய்களைக் குணப்படுத்த முன்நிற்றல். |
| தனுசு | கல்விப்புலத்தில் சாதனை புரிய எண்ணுதல், சுற்றாடல் சுத்தத்தில் முற்று முழுதாக ஈடுபடல். |
| மகரம் | நியாய அநியாயங்களை எடுத்துரைக்க முற்பட்ட வேளைரகளை ஏற்படல், சொத்துக்கள் வாங்கல் தாமதப்படல். |
| கும்பம் | எடுத்த காரியம் நிறைவேற தொடர்ந்தும் தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளல், நடக்கக் கூடாதது நடந்து விடலாம் என்று மனது சங்கடப்படல். |
| மீனம் | நோய் நொடி வாட்டினாலும் எடுத்தபணியை நிறைவேற்ற உறுதியுடன் செயற்படல். |

# சச்சின் விமர்சனம் மதிப்பளிக்கும் கபில்



(புதுடில்லி)

சச்சின் தனது சுயசரிதையில் பயிற்சியாளராக கபில்தேவ் ஏமாற்றமளித்தார் என்று கூறியது அவரது சொந்தக் கருத்து என கபில்தேவ் கூறியுள்ளார்.

"அது அவரது சொந்தக் கருத்து, ஒவ்வொருவருக்கும் அவரது கருத்தைக் கூற உரிமை இருக்கிறது. நான் அனைவரது கருத்தையும் மதிக்கக்கூடியவன். அவரது நூலுக்கு நான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் கபில்தேவ்.

சச்சின் தனது சுயசரிதையான பிளேயிங் இட் மை வே-யில் ஆஸ்ரேலியா பயணத்தின் போது தான் கேப்டனாக இருந்த சமயத்தில் பயிற்சியாளராக இருந்த கபில்தேவ் அணியின் உத்திகள் பற்றிய விவாதங்களில் கலந்து கொள்ளவில்லை என்பது ஏமாற்றமளித்தது என்று கூறியிருந்தார்.

உலகக்கோப்பை கிரிக்கெட்டில் இந்தியாவின் வாய்ப்பு பற்றி கபில் கூறும்போது, எமது எந்த வித முடிவுகளுக்கும் தாவ விரும்பவில்லை. நம் அணியை வாழ்த்துகிறேன். அவர்கள் அங்கு சென்று நல்ல கிரிக்கெட்டை ஆடுவார்கள் என்று நம்புகிறேன். என்றார்.

# தொடக்க வீரராக களமிறங்க ஆசைப்படுகிறார் மஹேல

(கொல்கத்தா)

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் ஜெயவர்த்தன மீண்டும் தொடக்க வர்ராக ஆட விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிகள் அடுத்த ஆண்டு தொடங்கவுள்ள நிலையில், இலங்கை அணியின் மூத்த வீரர் ஜெயவர்த்தன (வயது-37) உலகக்கிண்ணப் போட்டிகளோடு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில் தொடக்க ஆட்டக்காரராக விளையாட விருப்பம் தெரிவித்துள்ள ஜெய



வர்த்தன இது பற்றி கூறுகையில், என்னை தொடக்க ஆட்டக்காரராக விளையாட அனுமதிக்கும்படி தேர்வாளர்களிடம் மண்டியிட்டு கேட்க முடியாது.

ஆனால் தொடக்க ஆட்டக்காரர் வரிசை எனக்கு பொருத்தமானது. உலகக்கிண்ணப் போட்டிகளில் அந்த வரிசையில் ஆட வேண்டும் என்று நினைக்கிறேன்.

அதே நேரத்தில், மிடில் வரிசையில் போதிய அனுபவம் வாய்ந்த துடுப்பாட்டக்காரர்கள் இலலாததால், அந்த வரிசையில் நான் ஆட வேண்டும் என்று தேர்வாளர்கள் விரும்புகிறார்கள்.


உலகக்கிண்ணத்திற்கு இன்னும் 3 மாதங்கள் இருப்பதால் என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம் என்று கூறியுள்ளார்.

# சமநிலையில் முடிவடைந்த நான்காவது சுற்று ஆட்டம்

(சோச்சி)

ஆனந்த்-கார்ல்சன் இடையிலான உலக செஸ் போட்டியின் 4ஆவது சுற்று சமநிலையில் முடிவடைந்நது.

நடப்பு சம்பியன் மாக்னஸ் கார்ல்சன் (நோர்வே)- முன்னாள் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் (இந்தியா) இடையிலான உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டி ரஷ்யாவின் சோச்சி நகரில் நடந்து வருகிறது. 12 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்று சமநிலைஆனது. 2-வது சுற்றில் கார்ல்சனும், 3-ஆவது சுற்றில் ஆனந்தும் வெற்றி பெற்றனர்.



இந்த நிலையில் 4ஆவது சுற்று ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. முந்தைய நாளில் தோல்வி அடைந்திருந்தாலும் அதன் தாக்கம் எதுவுமில்லாதபடி முதல்நிலை வீரரான கார்ல்சன் வெள்ளை நிறக்காயுடன் ஆட ஆரம்பித்தார். முதலில் தனது ராஜாவுக்கு முன் இருந்த சிப்பாயை இரண்டு கட்டம் நகர்த்தினார். ஆனந்த் தனது பிஷ்ப்புக்கு முன் இருந்த சிப்பாயை இரண்டு கட்டம் ஏற்றி "சிசிலியன்" முறையில் தொடக்கினார்.

முதல் 17 நகர்த்தல்களில் தலா இரண்டு சிப்பாய் பரிமாற்றம் மட்டுமே நிகழ்ந்தது. 18-ஆவது நகர்த்தலில் குதிரைகள் வெட்டப்பட்டன. 22ஆவது நகர்த்தலில் தலா ஒரு யானை வெளியேற்றப்பட்டன. 25, 26-வது நகர்த்தல்களில் பிஷ்ப்புகள் வீழ்த் தப்பட்டன.

என்றாலும் ஆட்டம் விறுவிறுப்பு இன்றி மந்தமான நிலையில் சென்று கொண்டிருந்தது. 30-ஆவது நகர்த்தலின் போது இருவரும் சமநிலையில் இருந்தனர். கால அவகாசமும் சமமாக இருந்தது. இருப்பினும் பரஸ்பர சமநிலை செய்யும் மனம் இல்லாமல் ஆடிக் கொண்டிருந்தனர்.

ஆனந்தின் 'டி' வரிசை சிப்பாய் கார்ல்சனுக்கு சற்று குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தது. எது எப்படி இருந்தாலும் மீண்டும் மீண்டும் செக் என்கிற முறையில் ஆட்டத்தினை சமநிலை செய்ய முடியும் என்ற எண்ணத்தில் கார்ல்சன் சிபபாயை முன்னேற்ற முயற்சித்தார்.

கார்ல்சனின் 'ஏ' வரிசை சிப்பாயை ஆனந்த் கைப்பற்றியதுடன், இருந்த கொஞ்ச நம்பிக்கையும் தளர்ந்து சமநிலை செய்ய கார்ல்சன் ஒப்புக் கொண்டார். சுமார் 5 மணி நேரம் நீடித்த ஆட்டம் 47-ஆவ்து நகர்த்தலில் முடிவுக்கு வந்தது.

ஆனந்த் 'சிசிலியன்' பாணியில் கார்ல்சனுக்கு எதிராக 16 ஆட்டங்களில் விளையாடி 4-இல் வெற்றியும், 2-இல் தோல்வியும், 10இல் சமநிலையும் கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த போட்டியில் இருவரும் தலா 2 புள்ளிகளுடன் சமநிலை யில் உள்ளனர் இன்று வெள்ளை நிறக்காயுடன் ஆனந்த்களம் காண்பர்

# நியூசிலாந்துடனான முதல் டெஸ்ட் பாகிஸ்தான் அணி பெரு வெற்றி



(அபுதாபி)

நியூசிலாந்து-பாகிஸ்தான் அணிகளிடையே அபுதாபியில் நேற்று நிறைவடைந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 248 ஓட்டங்களால் பெரு வெற்றியைப் பெற்றுள்ளது.

முன்னதாக முதல் இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி மொகமட் ஹபீஸ் (96), அகமட் ஷேசாட் 176, அசார் அலி (87), யுனிஸ்கான் (ஆட்டமிழக்காமல் 100) மிஸ்பா உல்ஹக் (102) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின்மூலம் 3 விக்கெட்டுக்களை இழந்து 566 ஓட்டங்களைக குவித்ததுடன் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன் பின்னர் தனது முதலாவது இனிங்ஸில் விளையாடிய நியூஸிலாந்து அணி ஆரம்பவீரரான லதம் (103) சதம் அடித்து கைகொடுத்த போதிலும் ஏனைய வீரர்கள், பாகிஸ்தான் வீரர்களின் பந்து வீச்சிற்கு முகம்கொடுக்க முடியாமல் விக்கெட்டுக்களை பறிகொடுக்க அவ்வணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக லதம் 103 அண்டர்சன் 48 வற்லிங் 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பாபர்3, ரகாத் அலி 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் விளையாடிய பாகிஸ்தான் அணி மொகமட் ஹபீஸின் (101) சதத்தின் மூலம் 2 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து 464 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என களமிறங்கிய நியூசிலாந்து வீரர்கள் பாகிஸ்தான் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் தமது விக்கெட்டுக்களை பறிகொடுக்க அவ்வணி 262 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன்மூலம் பாகிஸ்தான் அணி 248 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் ரகாத் அலி இம்ரான்கான் பாபர் மூவரும் தலா 2, யசிர்சா 3 விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ரகாத் அலி தெரிவானார்.

## 12 நிமிடங்களில் விற்றுத் தீர்ந்த நுழைவுச் சீட்டுக்கள்

இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே அடிலெய்டில் நடைபெறவுள்ள உலககிண்ணப் போட்டிக்கான நுழைவுச்சீட்டுக்கள் 12 நிமிடங்களில் விற்றுத் தீர்ந்தன.

50,000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய கொள்திறன் கொண்ட அடிலெய்ட் மைதானத்தில் பெப்ரவரி 15, 2015 அன்று இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இதற்கான நுழைவுச்சீட்டுக்கள் தொடங்கிய சில நிமிடங்களில் முடிவடைந்தன.

மேலும், இந்தப் போட்டியை காண இந்தியாவிலிருந்து 20,000 ரசிகர்கள் அவுஸ்ரேலியாவிற்கு வருகை தருவதாக அடிலெய்ட் மைதான நிர்வாகி தெரிவித்துள்ளார்.

உலக்க்கிண்ண போட்டித் தொடரின் 2வது நாள் இந்தப் போட்டி நடைபெறுவதால் பெப்ரவரி 15ஆம் திகதியன்று இந்தியா-பாகிஸ்தான் போட்டி, ரசிகர்களுடன் மைதானமே களைகட்டவுள் ளதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அடிலெய்ட் மைதானத்தில் மட்டும் மொத்தம் 4 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறுகிறது. உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் இந்தியாவை பாகிஸ்தான் வீழ்த்தியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது

# அதிருப்தியில் சங்கா



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் தனக்கு ஓய்வளிக்கப்பட்டிருப்பது வருத்தமளிப்பதாக இருக்கிறது என சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான முதல் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடிய சங்கக்கார கடைசி இரு ஒரு நாள் போட்டிக்கு ஓய்வு என்ற பெயரில் கழற்றி விடப்பட்டார்.

இதனால் அதிருப்தி அடைந்துள்ள சங்கக்கார இது பற்றி கூறுகையில், ஒரு தொட ரின் பாதியில் இருந்து, குறிப்பாக அணி தோற்றுக் கொண்டிருக்கும் போது யாரும் விலக விரும்ப மாட்டார்கள்.

அணி தோல்விகளை சந்திக்கும் போது, ஒன்றாக இணைந்து விளையாடி வெற்றியை பெற வேண்டும் என்றுதான் எப்போதும் விரும்புகிறோம். அணி வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் போது விலகுவது கண்டிப்பாக பிரச்சினையாக இருக்காது என்று தெரிவித்துள்ளார்.

## மைலோ கிண்ணக் கால்பந்து

# மானிப்பாய் இந்துவில் 3 ஆவது தகுதிகாண் போட்டிகள்

## பாடுமீன், சென். மேரீஸ் முதன்மைச்சுற்றுக்கு முன்னேற்றம்





(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாம் கட்டப் போட்டிகள் நாளை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளன. நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாம் கட்டப் போட்டிகளில் குருநகர் பாடுமீன், நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் முதன்மைச் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் யாழ் மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள மைலோ கிண்ண கால்பந்து போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அணிகளுக்கான தகுதிகாண் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் யாழ்ப்பாண பிரதேச அணிகளுக்கிடையிலான தகுதி காண் போட்டிகள் நேற்று முன்தினம் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

தகுதி காண் போட்டியின் முதலாவது காலிறுதிப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதின. இரு அணிகளும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ளா ததால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர மானிக் கப்பட்டது. இதில் சென். மேரிஸ் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் பெற்றுக் கொண்டதால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பாடுமீன் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அடுத்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் உரும்பிராய் சென். மைக்கல் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதின. இதில் ஊரெழு றோயல் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியும் குருநகர் பாடுமீன் அணியும் மோதின. முதற் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப் படுத்தும் வகையில் மோதிக் கொண்டபோதிலும் பாடுமீன் வீரர் டிலிப் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய பாடு மீன் அணி அடுத்தடுத்து கோல் மழை பொழிந்து முன்னிலைபெற்றது. பிற்பாதி ஆட்டத்தின் 45 ஆவது நிமிடத்தில் சேயன், 50 மற்றும் 55ஆவது நிமிடங்களில் ஞானபிரதாப் ஆகியோர் கோல் மழை பொழிந்து பாடுமீன் அணியின் வெற்றியை உறுதி செய்தனர். நிறைவில் பாடுமீன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதன்மைச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சென். மேரிஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதன்மைச் சுற்றுக்குத் தகுதி பெற்றது. இதில் ஜெனட் இரு கோல்களையும் ஜக்சன் ஒரு கோலையும் போட்டு அணியின் வெற்றிக்கு துணை புரிந்தனர்.

இதேவேளை, வலிகாமம் பிரதேசத்திற்குட்பட்ட அணி களுக்கிடையிலான போட்டிகள் நாளைய தினம் மானிப் பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. இதில் இளவாலை யங்ஹென்றீஸ், வட்டுக்கோட்டை, அராலி ஜேம்ஸ், சென் பீற்றர்ஸ், மகாத்மா, குறிஞ்சிக் குமரன், சென் லூஸ், கல்வளை விநாயகர், அண்ணா, தெல் லிப்பளை நாமகள், குப்பிளான் விக்னேஸ்வரா, ரெட் றேஞ்சர் ஆகிய அணிகள் மோதவுள்ளன. இதில் அரையிறுதிப் போட்டியில் வெல்லும் இரு அணிகள் முதன்மைச் சுற்றுக்கு முன்னேறும். இதேவேளை, தீவக பிரதேசத்திலிருந்து வேலணை துறையூர் ஐய னார், மெலிஞ்சிமுனை இருதயராஜா அணிகள் முதன்மைச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ள அதே வேளை, முதன்மைச் சுற்று ஆட்டங்கள் எதிர்வரும் 21,22,23 ஆம் திகதிகளில் யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணி களுக்கிடையிலான ஆட்டமொன்று இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொக்குவில் இந்து, மானிப்பாய் ஏஞ்சல் சம்பியன்



(மானிப்பாய்)

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை நடாத்திய குறஸ்வே இன் நோத் கூடைப் பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண் ணத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் ஏஞ்சல் அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

16 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டங் கள் கடந்த 10ஆம் திகதி மானிப்பாய் சர்வதேச ஏஞ்சல் பாடசாலை மைதானத் தில் நடைபெற்றன. விறுவிறுப்பாக நடை பெற்ற இப்போட்டியில் ஏஞ்சல் பாடசாலை அணி 37-29 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத் தைக் கைப்பற்றிக் கொண்டது. குறுகிய காலத்தில் கூடைப்பந்தாட்டத்தில் கால்பதித்த ஏஞ்சல் பாடசாலை சிறப்பாக ஆடி கிண்ணம் வென்றமையை விருந்தினர்கள் பலர் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஏஞ்சல் பாடசாலை வீரர் சஜீத்திரா, தொடர் நாயகனாக யாழ். இந்துக் கல்லூரி வீரர் கீர்த்திகன் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டனர்.

இதேவேளை, பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 31-28 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகி யாக கொக்குவில் இந்துக் கல்லூரி வீராங் கனை தர்சிகா, தொடர் நாயகியாக உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனை நவரூபினி ஆகியோர் தெரிவு செய் யப்பட்டனர். (93, 48)

# மூன்றாமிடம் சென். பற்றிக்ஸ்

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டத் தொடர் யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டது. இப்போட்டித் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டி கடந்த வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும் மோதின.

முதற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காது முட்டிமோதிக்கொண்டன. இருப்பினும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரர் சேம் சைட் கோலடித்தார். இதன் மூலம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முன்னிலை பெற்றது. தொடர்ந்து உற்சாகம் பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான ஜக்சன், எஸ்லராஜ் அடுத் தடுத்து கோல் அடித்து அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றனர் மறுபுறம் கோலடிக்க நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி போராடியபோதிலும் அதன் முயற்சிக்கு இறுதி வரை பலன்கிடைக்கவில்லை. நிறைவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இதேவேளை, இப்போட்டித் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 93)

## கால்பந்து மத்தியஸ்தர் செயலமர்வு

# சென். ஜோண்ஸில் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் தெரிவு செய்ப்பட்ட யாழ். மத்தியஸ்தர்களுக்கான கால்பந்து செய லமர்வு நாளை காலை 8.30 மணிக்கு சென். ஜோண்ஸ் கல்லூரியில் நடைபெற வுள்ளது. இதில் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு கால்பந்து குறித்து செயன்முறை விளக்கங்களை அளிக்க வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# ஐ.நா.வின் இலங்கை மீதான அழுத்தம் எதுவரை செல்லும்?

- வே. அர்ச்சுனன் -



தற்போதைய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையாளர், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். மேற்குலகின் பொறிமுறைகளுக்கு ஏற்ப செயற்பட்டு வரும் ஐ.நா. சபை இலங்கை மீதான அழுத்தத்தை தொடர்ந்து அதிகரித்து வருவதாக இலங்கைக்கு ஆதரவளிக்கும் நாடுகள் குற்றம் சாட்டுகின்றன.

இதேவேளை, மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் தமிழ்ப் பெண்களை பாலியல் ரீதியில் துன்புறுத்தினரென அண்மையில் நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார். இலங்கை அரசாங்கம் உத்தியோக பூர்வமாக குற்றச்சாட்டை முன் வைத்தால் மட்டுமே பதிலளிக்க முடியுமெனவும் அநாமதேய குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் கிடையாது என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சயிட் அக்பருதின் கூறினார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வருவதாகவும் அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இருந்திருந்தால் அது குறித்து அரசாங்கம் முறைப்பாடு செய்திருக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தைத் தமது பிடிக்குள் வைத்திருப்பதில் இந்தியாவிற்கும் அக்கறையுண்டு. சீனாவிற்கும் அக்கறையுண்டு. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கும் அக்கறையுண்டு. இந்து சமுத்திரத்தை எவர் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றார்களோ அவர்களின் கட்டுப்பாட்டிலேயே ஆசியா இருக்கும் என்றும் உலகின் ஏழு சமுத்திரங்களுக்குமான திறவுகோலாக இந்து சமுத்திரமே திகழும் என்றும் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற கடற்படைத் தளபதியான அட்மிரல் அல்பிரட் தயார் மாகன் கூறியிருக்கின்றார்.

அதேபோன்றுதான் ஈழத்தீவின் முக்கியத்துவமும். ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்னர் கி.பி 1611இல் ஸ்பெயின் மன்னருக்கு எழுதிய மடல் ஒன்றில் முழு இந்தியாவிற்குமான திறவுகோலாக சிலோன் என்ற தீவு திகழ்கின்றது என்று ஸ்பானிய கடற்படை தளபதியான அன்ரோனியோ மார்ட்டின்ஸ் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதற்கு ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி 1798இல் ஈழத்தீவை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றிய செய்தியை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அறிவிக்கும் பொழுது, உலகிலேயே மிகப் பெரும் பெறுமதி வாய்ந்த நிலத்தை கைப்பற்றியிருக்கிறோம் என்று அன்றைய பிரித்தானியப் பிரதமர் வில்லியம்பிற் பெருமிதத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான முக்கியத்துவத்தை கொண்ட இலங்கையில், அமெரிக்கா என்ற உலக வல்லரசுக்கும் இந்தியா, சீனா போன்ற பிராந்திய வல்லரசுகளுக்கும் மத்தியில் உள்ள ஆதிக்கப் போட்டிகளின் விளைவாக தமிழீழம் மலரும் என்ற கனவு காண்பதாலோ அன்றி எதிர்காலத்தில் சீனாவிற்கும் இந்தியாவிற்குமிடையில் பெரும் போர் வெடிக்குமென்றும் அந்தப் போரின் விளைவாக தமிழீழம் மலரும் என்ற கற்பனையில் மிதப்பதாலோ ஒன்றும் ஆகப் போவதில்லை.

அமெரிக்கா, சீனா, இந்தியா இவற்றுக்கிடையில் பெரும் யுத்தம் வெடிக்கும் பட்சத்தில் அதனால் மிக மோசமாக பாதிக்கப்படுவதும் பெருமழிவுகளை சந்திக்கப் போவதும் இலங்கையில் உள்ள அனைத்து மக்களுமாக இருக்கும். அவ்வளவுதான்.

அடுத்து, தமிழீழத்தை இந்தியா பெற்றுத்தருமென கனவில் மிதப்பவர்கள். இவர்களைப் பொறுத்தவரை இன்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீது நம்பிக்கையைக் குவித்திருக்கிறார்கள். அவர் தனது சொல்லிற்கு கட்டுப்படும் ஆட்சி டில்லியில் அமைந்தால் இந்தியப் படைகளை அனுப்பி தனி ஈழத்தை நிறுவவேண்டும் என்று கூறியிருந்ததும் தமிழீழ தனியரசிற்கான பொதுவாக்கெடுப்பை ஐ.நா.வின் கண்காணிப்பின்கீழ் நடத்த இந்திய மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கூறியிருந்தமையும் இவர்களை நாவூற வைத்திருப்பவை.

அதெல்லாம் நடைமுறையில் சாத்தியமற்றவை என்று தெரிந்துகொண்டும் இவர்கள் கண்விழித்துத் தங்கள் கனவை இழக்க விரும்பாமல் உறங்குபவர்கள். இவர்களது கனவுகளைக் கேட்டு நாமும் சும்மா கிளுகிளுப்பில் மிதந்துகொண்டிருந்தால் கீழிருக்கும் கோவணமும் உருவப்பட்டுப் போவது தெரியாமல் நின்றுவிட்டு கடைசியில் அதற்கும் சேர்த்து வருத்தப்பட வேண்டும்.

---

# கே.வி. மகாதேவன் 28



- பி.ஜி.எஸ்.மணியன் -

"ராணி சம்யுக்தா" - டி. யோகானந்த் இயக்கத்தில் கண்ணதாசன் கதை வசனம் பாடல்களை எழுத எம்.ஜி.ஆர் - பத்மினி நடித்த படம். பாடல்கள் இன்றளவும் காற்றலைகளில் கானம் பாடிக்கொண்டே இருக்கின்றன.

"ஓ வெண்ணிலா ஓ வெண்ணிலா" - டி.எம்.எஸ் - சுசீலாவின் குரல்களில் பாடலை "பீம்ப்ளாஸ்" ராகத்தில் அமைத்த கே.வி.மகாதேவன் சரணங்களுக்கு இடையேயான இணைப்பிசைக்கு சுத்ததன்யாசி ராகத்தைப் பயன்படுத்தி இருப்பது புருவத்தை உயர்த்த வைக்கிறது.

"சித்திரத்தில் பெண் எழுதி" - ஜமுனாராணியின் இசைப் பயணத்தில் ஒரு மறக்க முடியாத பாடல்.

"இந்தப் பாட்டுக்கு மாமா பயன்படுத்தின வாத்தியங்கள் மொத்தமே பதினாலுதான். ஆனால் பாட்டைக் கேட்டால் நிறைய வாத்தியங்களைப் பயன்படுத்தி இசை அமைச்ச மாதிரி இருக்கும். என்னாலே மறக்கவே முடியாத ஒரு பாட்டு." என்று இந்தப் பாடலைப் பற்றி ஜமுனா ராணி "சினிமா எக்ஸ்பிரஸ்" நேர்காணலில் குறிப்பிட்டிருக்கிறார்.

"அழகு நிலா" என்று இன்னொரு படம்.

பி.பி. ஸ்ரீனிவாஸின் குரலில் "சின்னச்சின்ன ரோஜா சிங்கார ரோஜா" - பஹாடி ராகத்தைப் பயன்படுத்தி வார்த்தைகளுக்கே வலிக்காதபடி பட்டுவிரிப்பில் மெத்தென்று பாதங்களை வைப்பதைப் போல கே.வி. மகாதேவன் அமைத்திருக்கும் இசைக்காகவே கேட்கவேண்டிய பாடல் இது.

அதுவரை கதை வசனம் மட்டுமே எழுதிக்கொண்டிருந்த ஏ.பி. நாகராஜன் இயக்குனராக அடுத்த கட்டத்துக்கு நகர்ந்த படம் "வடிவுக்கு வளைகாப்பு"

சிவாஜி கணேசனும் சாவித்திரியும் நடிக்க, நண்பர் வி.கே. ராமசாமியுடன் கூட்டாக ஏ.பி. நாகராஜன் தயாரித்து இயக்கிய படம்.

"சீருலாவும் இன்ப நாதம் ஜீவசங்கீதம்"- டி.எம்.சௌந்தரராஜன் - பி. சுசீலாவின் குரல்களில் சுத்ததன்யாசி ராகத்தில் உண்மையிலேயே செவிகளுக்கு தேன்சுவையான பாடல்தான்.

"திலகமே தமிழ் நாட்டுக் கலை உலகின் திலகமே"- படம் எடுத்து ஆடும் நாகத்தின் முன்னால் நடிகர் திலகம் வீணை மீட்டிப் பாடுவதாக அமைந்த பாடல். பீம்ப்ளாஸ் ராகத்தில் துவங்கும் பாடல் "இசை கேட்டு ஓடி வந்தாயா" என்ற சரணத்தில் சிந்துபைரவிக்கு மாறி மனதை கொள்ளை கொள்கிறது.

திரை இசையில் தரமான பாடல்களில் ஒன்றாக அமைந்தது இந்தப் பாடல். நேயர்கள் தவறவிடக்கூடாத பாடல் இது.

"தாய் சொல்லைத் தட்டாதே" - படத்தைத் தொடர்ந்து எம்.ஜி.ஆரை வைத்து வரிசையாக தொடர் வெற்றிப்படங்களாக எடுத்துத் தள்ளிக்கொண்டிருந்தார் தேவர்.

"தாயைக் காத்த தனயன்" - 1962 தமிழ்ப் புத்தாண்டில் வெளிவந்து மிகப் பெரிய வெற்றியைக் கண்டது.

எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி, கண்ணாம்பா, எம்.ஆர். ராதா. அசோகன் நடித்திருந்தனர்.

காட்சிக்குக் காட்சி உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய ஆரூர்தாஸின் வசனங்கள்.

மாற்றமுடியாத அழுத்தமான செண்டிமெண்டுக்கு சொந்தக்காரர் சின்னப்பா தேவர்.

"வெற்றி வெற்றி" என்று கதாநாயகன் கூவிக்கொண்டே வரும் காட்சி கண்டிப்பாக படத்தில் இருக்கும்.




அதே போல பாடகர்கள் என்று எடுத்துக்கொண்டால் அவருக்கு டி.எம். சௌந்தரராஜனும் பி.சுசீலாவும் கண்டிப்பாக வேண்டும். இசைக்கு கே.வி. மகாதேவன் தான்.

தாயைக் காத்த தனயன் படத்திலும் அனைத்துப் பாடல்களையும் இந்த இருவருமே தான் பாடியிருந்தார்கள்.

"காட்டுராணிக் கோட்டையிலே கதவுகள் இல்லை" - கதாநாயகியின் அறிமுகக் காட்சிக்கான பாடல்.

பொதுவாக எம்.ஜி.ஆரின் படங்களில் நாயகியர் தான் அவருக்காக ஏங்குவதும், அவரை நினைத்து கனவு காண்பதும் உருகிப் பாடுவதுமாக இருப்பார்கள்.

ஆனால் "தாயைக் காத்த தனயன்" இதற்கு விதிவிலக்கு.

இதில் எம்.ஜி.ஆர். தான் நாயகியை (சரோஜாதேவி) நினைத்து அவள் நினைவில் உருகிப் பாடுவதாக காட்சி அமைப்பு.

"கட்டித் தங்கம் வெட்டி எடுத்து
காதல் என்னும் சாறு பிழிந்து
தட்டித் தட்டி சிற்பிகள் செய்த
உருவமடா - அவள்
தளதளவென்று ததும்பி நிற்கும் பருவமடா."

டி.எம்.எஸ். பாடும் இந்தப் பாடல்தான் படத்தில் இடம்பெற்ற அனைத்துப் பாடல்களிலுமே முதலிடம் பிடித்த பாடல். சங்கராபரண ராகத்தின் ஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு முதல் தர மெல்லிசைப் பாடலாக அமைத்திருக்கிறார்.

"தொட்டுத் தொட்டு சென்றன கைகள்" - என்று தொடங்கும் சரண வரிகளுக்கு அமைத்திருக்கும் மெட்டிலேயே "தங்க ரதம் போல் வருகிறாள்" என்ற சரணத்தின் கடைசி வரிகளை - காலையில் மலரும் தாமரைப்பூ" என்று தொடங்கும் வரிகளை அமைத்து - ஒரு சரணத்திலேயே முற்பகுதிக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் அடுத்த பகுதியை அமைத்து... கேட்கக் கேட்கச் சுகமாக இருக்கும் வகையில் பாடலை அமைத்திருக்கிறார் மகாதேவன்.

இரண்டு டூயட் பாடல்கள்.

"மூடித் திறந்த இமை இரண்டும்" - நிதானமாகத் தொடங்கி வேகமாகப் பயணிக்கும் பாடல் என்றால் "காவேரிக் கரையிருக்கு" - பாடலோ உற்சாகத் துள்ளல் ராகம்.

"நடக்கும் என்பார் நடக்காது
நடக்காதென்பார் நடந்துவிடும்" -

கண்ணதாசனின் வரிகளில் இன்பமும் துன்பமும் கலந்த ஒரு சூழலைப் படம்பிடித்துக் காட்டும் ஒரு அசரீரிப் பாடல். "நட பைரவி" ராகத்தின் அடிப்படை ஸ்வரங்களைக் கையாண்டு அமைத்திருக்கிறார்.


ஒரு பாடலை இன்பமாகவும் அடுத்த பாடலை துன்பச் சூழலிலும் அமைப்பது என்பது எல்லாருமே சாதாரணமாகச் செய்யக்கூடியதுதான். ஆனால் ஒரே பாடலில் முதல் வரியில் மலர்ச்சியையும், அடுத்தவரியில் தளர்ச்சியையும் உணரவைக்கும் வண்ணம் இசை அமைப்பது என்பது கடினமான ஒன்று.

வரிக்கு வரி ராகத்தை மாற்றலாம். ஆனால் ஒரே ராகத்தில் வரிக்கு வரி முற்றிலும் வேறுபட்ட உணர்வுகளை வெளிக்கொணருவது என்பது...

மகத்தான அந்தச் சாதனையை அனாயாசமாக இந்தப் பாடலில் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் மகாதேவன்.

(தொடரும்)

# ஏரிகள் பத்து!




**உலகில் சிறியதும் பெரியதுமாக ஆயிரக்கணக்கான ஏரிகள் உள்ளன. இவற்றில் முதல் 10 ஏரிகளை பார்ப்போம்:**

1. முதலிடம் கஸ்பியன் ஏரிக்கு. இதனை கடல் எனக் கூறுகின்றனர். காரணம் இதன் தண்ணீர் உப்பு! இதன் நீளம் 1199 கி.மீ. ஆழம் 946 மீற்றர்.

**இது தவிர்த்த மற்ற 9 ஏரிகள் வருமாறு:**

**2. சுபீரியர்:** இது அமெரிக்கா மற்றும் கனடாவில் பரவியுள்ளது. இதன் நீளம் 616 கி.மீ. ஆழம் 406 மீற்றர்.

**3. விக்டோரியா:** தான்சானியா மற்றும் உகாண்டாவில் பரவியுள்ளது. நீளம் 322 கி.மீ. ஆழம் 82 மீற்றர். கீழே வரும் சில ஏரிகள் இதனைவிட பெரியதாகத் தெரியலாம். ஆனால் பரப்பில் உண்மையில் இதுவே பெரியது!

**4. ஹர்ரான்:** அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ளது. நீளம் 397 கி.மீ. ஆழம் 229 மீற்றர்.

**5. மிக்சிகன்:** அமெரிக்காவில் உள்ளது. நீளம் 517 கி.மீ. ஆழம் 281 மீற்றர்.

**6. ஒரல்:** கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தானில் இது பரவியுள்ளது.

**7. தன்கன்பாகா:** தான்சானியா மற்றும் கொங்கோவில் உள்ளது. நீளம் 676 கி.மீ. 1,435 மீற்றர் ஆழமும் கொண்டது.

**8. பைக்கால்:** ரஷ்யாவில் உள்ளது. இதன் நீளம் 636 கி.மீ. ஆழம் 1,714 மீற்றர்.

**9. க்ரேட்ஃபியர்:** கனடாவில் அமைந்துள்ளது. நீளம் - 373 கி.மீ. ஆழம் 82 மீற்றர்.

**10. நயாகா மாலவி:** மொசாம்பிக் மற்றும் தான்சானியாவில் பரவியுள்ளது. நீளம் 579 கி.மீ. ஆழம் 706 மீற்றர்.

உலகின் மிகப்பெரிய ஏரிகளின் எண்ணிக்கை 37. இவற்றில் ஆபிரிக்காவில் மட்டும் 14 உள்ளன. இந்தியாவில் உதய்ப்பூரை ஏரிகளின் நகரம் என அழைப்பர்.

# ஒரு துப்பாக்கி, ஒரு போர், ஒரு சாகசம்





உலகின் புகழ் பெற்ற கைத்துப் பாக்கிகளில் ஒன்று கோல்ற் 45 (Colt 45). இயந்திரத் துப்பாக்கிகளில் எப்படி ஏகே 47 பிரபலமோ, அப்படி கைதுப்பாக்கிகளில் கோல்ற் 45 பிரபலம். இந்தத் துப்பாக்கி பிறந்த கதை சுவாரசியமானது.

19ஆம் நூற்றாண்டில் கட்டைத் துப்பாக்கிகளையும், பயோனட்களை யும் ரிவோல்வர்களையும் போருக்குப் பயன்படுத்தி வந்தார்கள். ரிவோல்வர் என்பது தமிழ் சினிமாவில் வில்லன்கள் வைத்திருக்கும் ஆறு குண்டு அடங்கிய துப்பாக்கி. இதை வைத்துப் போரைச் சமாளிக்க முடியாது என்பது 1899இல் தொடங்கிய பிலிப்பைன்ஸ் - அமெரிக்கப் போரில் தெரிய வந்தது. காரணம் அந்தப் போரில்தான் முதல் முதலாக காடுகளில் மறைந்திருந்து தாக்கும் கெரில்லா போர்வீரர்களை அமெரிக்கப் படைகள் எதிர்கொள்ள நேர்ந்தது.

பிலிப்பைன்ஸ் கெரில்லா வீரர்க ளான மோரோக்கள் (Moro), திடீர் என அமெரிக்க வீரர்கள் மேல் பாய்ந்து தாக்குதல் நடத்துவார்கள். மோரோக்கள் வலியை மறக்கடிக்கும் போதை மருந்தையும் பயன்படுத்திய தால் அமெரிக்க வீரர்களின் ரிவோல்வர் துப்பாக்கி குண்டுகள் அவர்களைச் சாய்க்க முடியவில்லை.

வெறும் கத்தி, வில் அம்பை மட்டும் வைத்திருந்த மோரோக்கள், அன்றைய உலகின் வல்லரசான அமெரிக்காவை பிலிப்பைன் காட்டுப் பகுதிகளில் எளிதில் தோற்கடித்தார்கள். கற்கால ஆயுதம் ஏந்தியவர்களிடம் இப்படி படுதோல்வி அடைந்த அமெரிக்க ராணுவம் பழியை ரிவோல்வர்கள் மேல் சுமத்தி, புதிய வகை கைதுப்பாக்கிகள் வேண்டும் என முடிவெடுத்தது.

புதிய வகை கைதுப்பாக்கிகளுக்கு வைக்கப்பட்ட பரிசோதனையில் கோல்ற் 45 மற்றும் சாவேஜ் (savage) எனும் இரு கம்பனிகளின் துப்பாக்கிகள் மட்டுமே இறுதிக் கட்ட சோதனைக்கு எஞ்சி இருந்தன. கடைசிக் கட்ட பரிசோதனையில் இரு துப்பாக்கிகளையும் இடைவிடாமல் தொடர்ந்து சுட்டுக்கொண்டே இருந்தார்கள்.

2 நாட்களில் கோல்ற் துப்பாக்கி 6000 குண்டு களைத் தொடர்ந்து ஓய்வின்றி சுட்டுத் தள்ளியது. அதன்பின் துப்பாக்கியைக் கையில் பிடிக்க முடியாமல், சூடானதும் அதை நீரில் போட்டு எடுத்து, மீண்டும் சுட ஆரம்பிக்கையில் அது தொடர்ந்து சுட்டது.

அருகே பரிசோதிக்கப்பட்ட சாவேஜ் துப்பாக்கி 2 நாட்களில் 37 தடவை சுடுவதை நிறுத்தி இருந்தது. ஆக இப்படிப்பட்ட அக்கினிப் பரீட்சையில் தேறிய செமி ஓட்டோமற்றிக் துப்பாக்கி கோல்ற், அமெரிக்க ராணுவத்தின் ஆதர்ச துப்பாக்கி ஆக மாறியது. அதன் களப்பய னைச் சோதிக்கும் வாய்ப்பை முதல் உலக யுத்தம் கொடுத்தது.

முதல் உலக யுத்தத்தில் 13 பேர் அடங்கிய அமெரிக்கப் படையணி ஒன்றுக்கு ஜெர்மன் படையணிகளைத் தாக்கி, அவர்களின் பீரங்கிகளைக் கைப்பற்றும் பணி கொடுக்கப்பட்டது. பதுங்கிப் பதுங்கிச் சென்ற அந்த அணியின் மேல் யதேச்சையாக வந்து விழுந்த பீரங்கிக் குண்டு ஒன்று, அதன் தலைவர் உட்பட ஆறு பேரைக் கொன்றது. தலைவரை இழந்த அணிக்குத் தலைமை தாங்கினார், அல்வின் யோர்க் எனும் இளைஞர்.

வெறும் ஏழு பேரை வைத்துக் கொண்டு நூற்றுக்கணக்கான ஜெர்மானியர்கள் மேல் தாக்குதல் தொடுத்தார். யார் எங்கே இருந்து சுடுகிறார்கள் எனத் தெரியாத குழப்பமான சூழல். எத்தனை அமெரிக்கர்கள் தாக்குகிறார்கள் எனப் புரியாமல் ஜெர்மானியர்கள் குழம்பினார்கள்.

ஒரு கட்டத்தில் யோர்க்கின் இயந்திரத் துப்பாக்கியில் குண்டுகள் தீர்ந்த நிலையில் யோர்க்கை நோக்கி பயோனெட்டுடன் ஆறு ஜெர்மானிய வீரர்கள் பாய்ந்தார்கள். சற்றும் தயங்காமல் தன் கோல்ற் 45 துப் பாக்கியை உருவி எடுத்த அல்வின் யோர்க், ஆறு ஜெர்மானியர்களையும் சுட்டுத் தள்ளினார். அதன்பின் யோர்க் தன் கோல்ற் 45ஐ மட்டும் வைத்துக் கொண்டு, ஜெர்மானியர்களைச் சுட்டுத் தள்ளி, முன்னேறி, பீரங்கிகளை அடைந்து, பீரங்கிகளை இயக்கியவர்களைச் சுட்டு கொன்று, பீரங்கிகளைப் பிடித்தார். பீரங்கி பிடிபட்டபோது யோர்க்கின் துப்பாக்கி யில் மீதம் இருந்தது ஒரே ஒரு குண்டுதான்.

பீரங்கிகள் பிடிபட்டவுடன் ஜெர்மா னிய தளபதி போல் வோல்மர், சரண டைவதாகக் கூறினார். அதன்பின் ஒற்றை புல்லட்டுடனும், ஏழு வீரர்களு டனும் களத்தில் நின்ற அல்வின் யோர்க்கிடம் 4 அதிகாரிகள் உள்ளிட்ட 132 ஜெர்மானியர்கள் சரணடைந்தார்கள்.

அல்வின் யோர்க்குக்கு ராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருது வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டது. கோல்ற் 45, அதன்பின் உலக ராணுவ வரலாற்றில் உயரிய இடம் பெற்றது.

# கடுக்காய் வைத்தியம்!

கடுக்காயில் பொதுவாக மருத்துவக் குணம் அதிகம் உள்ளது. இது மலச்சிக்கலை நீக்கி கண், காது, மூக்கு, தொண்டை, மூளை ஆகியவற்றைச் சுத்தம் செய்து சக்தியைக் கொடுக்கிறது.

மருந்துக் கடையில் கிடைக்கும் கடுக்காயை வாங்கி உடைத்து கொட்டையை அகற்றிவிட்டு பவுடராக்கி தினமும் மூன்று முதல் ஐந்து கிராம்வரை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண்களின் பார்வை சக்தி அதிகரிக்கும். மண்டைச் சளியால் ஏற்பட்ட தலைவலி நீங்கும். மலச்சிக்கல், பேதி, ரத்தப்போக்கு, நாள்பட்ட மண்ணீரல் வீக்கம், காயங்கள், மூலம், வாயுத்தொல்லைகள் குணமாகும்.

மூன்று முதல் ஐந்து கிராம் வரை உலர்ந்த கடுக்காய்த் தோலை பவுடராக்கி உப்புடன் கலந்து சாப்பிட்டால் தலை முடி நரைக்காது.

கோடைக்காலத்தில் அதிக உஷ்ணத்தால் ஏற்படும் கண் எரிச்சல் நீங்க மஞ்சள் கடுக்காயைத் தண்ணீரில் அரைத்து கண்களின் மீது பூசினால் கண் எரிச்சல், சிவந்த கண்கள், உஷ்ணம் ஆகியவை குணமாகும்.

தேன் மெழுகை உருக்கி அதில் இரண்டு பங்கு கடுக்காய் பவுடர் கலந்து பூசி வந்தால் மூலம் குணமாகும்.

கடுக்காய் தோலை பவுடராக்கி மூன்று கிராம் அளவில் தினமும் சாப்பிட்டு வந்தால் பலவீனம் நிற்கும். கண் பார்வை அதிகரிக்கும். இதய பலவீனம் நிவர்த்தியாகும். தலைமுடி கறுப்பாகும்.

கடுக்காய் பவுடருடன் தேன் கலந்து சாப்பிட்டால் உடலும் உள்ளமும் விருத்தியடையும்.




# மலைகளை இணைத்த பாலம்!

இரு மலை உச்சிகளுக்கு இடையே நடப்பதற்காக தொங்கும் பாலமொன்று ஸ்விட்சர்லாந்தில் அண்மையில் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்தப் பாலத்திலிருந்து அதைச் சுற்றியுள்ள பல மலைகளைப் பார்க்க முடியும்.

ஸ்விட்சர்லாந்தில் உள்ள வியூ பொயின்ற் மலை உச்சியையும், இச்செக்ஸ் மலை உச்சியையும் இணைக்கும் இந்த தொங்கும் பாலத்தின் நீளம் 351 அடி. இந்தப் பாலத்தை அமைக்க 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலவானதாம்.







மானிப்பாய் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை நிகழ்வு...

# பக்தி நெறி மங்கா பழம் பெரும் புனித பூமி மானிப்பாய்

**அமைவிடம்**

மானிப்பாய் (Manipay) யாழ்ப்பாண மாவட்டத்தில், வலிகாமம் பிரிவில் உள்ள ஒரு ஊர் ஆகும். புராதன காலத்தில் பெரிய புலமென வர்ணிக்கப்பட்ட மானிப்பாய், யாழ். மாவட்டத்தின் வலிகாமம் தெற்குப் பிரிவில் அமைந்துள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. யாழ். மாவட்டத்தில் மக்கள்தொகை அடிப்படையில் நான்காவது இடத்தைப் பிடிக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவின் மக்கள்தொகை, 56 ஆயிரத்து 510 ஆகும். மானிப்பாய் யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 12 கிலோமீட்டர் (5 மைல்கள்) தொலைவில் அமைந்துள்ளது. யாழ் நகரில் இருந்து வடமேற்குத் திசையில் செல்லும் முக்கிய வீதியான மானிப்பாய் வீதி இவ்வூருக்கு செல்கிறது. சண்டிலிப்பாய், நவாலி, சுதுமலை, உடுவில், ஆனைக்கோட்டை ஆகிய ஊர்கள் மானிப்பாயின் எல்லைகளில் அமைந்துள்ளன.

**இடப்பெயர் வரக்காரணம்**

மானி + பாய் = மானிப்பாய். மாணி என்பதன் திரிபே மானி ஆகும். மானி என்பது மானமுள்ளவர், மாமன், மானியம என்ற பொருள் குறிக்கும் சொல்லாகும். மானியம் என்பது இறையிலி நிலம். மானியக்காரன் = கிராமத்தில் இனாம் நிலம் முதலியவற்றின் பரம்பரைப் உரித்துக்குரியவன் என்ற அடிப்படையிலும் இப்பெயர் ஆக்கம் பெற்றிருக்கலாம். மானிப்பாயில் பண்டை நாளிற் பிராமணக் குடியிருப்பு பெரிதாக இருந்ததாக கூறப்படுகிறது. மானி என்பது பிராமணரையும் பிரமச்சாரியையும் குறிக்கும் சொல்லாக வழங்கியுள்ளது

**வரலாறு**


யாழ்ப்பாணத்தில் பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலத்தில் அமெரிக்க சமயப் போதகர்களின் (அமெரிக்க மிஷன்) மையங்களில் ஒன்றாக இது விளங்கியது. இம் மிஷனின் சார்பில் அமெரிக்காவில் இருந்து வந்த மருத்துவரான சாமுவேல்/பிஸ்க் கிறீன் என்பார் 1864 ஆம் ஆண்டில் இங்கே ஒரு மருத்துவமனையை நிறுவியதுடன், மாணவர்களுக்கு மேனாட்டு மருத்துவத்திலும் தமிழ் மொழியில் பயிற்சியும் கொடுத்து வந்தார். இது "மானிப்பாய் கிறீன் நினைவு மருத்துவமனை" என்னும் பெயருடன் இன்றும் செயற்பட்டு வருகிறது.

**கல்வித்துறை.**

மானிப்பாய் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க பின்னணியைக் கொண்டுள்ளது. 89 சதவீதமான மக்கள் எழுத்தறிவு கொண்டவர்களாகஉள்ளனர் ஆங்கில மிஷனறிகள் சில பாடசாலைகளையும் இங்கே நிறுவினர்.

இப் பாடசாலைகள் தவிர பிற்காலத்தில் நிறுவப்பட்ட பல பாடசாலைகளும் இங்கே உள்ளன. 'இவற்றுள் மானிப்பாய் மெமோறியல், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி என்பன முக்கியமானவை.


இவை மட்டுமல்லாது மானிப்பாய் நூலகமும் கல்வித்துறைக்கு போதுமான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றது.




வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற பெண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## இங்கு பிறந்து புகழ் படைத்தோர்

- முதலியார் நமச்சிவாயம் (சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மாமனார்)
- சேர். அருணாசலம் மகாதேவன்
- நீதிபதி சிவா செல்லையா
- ஏ. மாணிக்கவாசகர்



மருதடி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவசிறீ. ப. ஜெயகுமாரக் குருக்கள்



புனர் நிர்மாணப் பணியில் உள்ள மருதடி விநாயகர் தேவஸ்தானம்






நடைமுறை சாத்தியமான வாழ்க்கைக்கு வழிகாட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா - மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் புகழாரம்

# கொக்குவில் பொது நூலகம் நவீனவடிவில் புனரமைப்பு

## தவிசாளர் வசந்தகுமார் தெரிவிப்பு

(திருநெல்வேலி)

கொக்குவில் பொது நூலகம் நவீன முறையில் புனரமைக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு வருடங்களுக்கும் மேலாக இந் நூலகத்தின் முன்பகுதி கட்டப்படுவதும், பின்னர் கவனிக்காது விடப்படுவதுமாக இருந்துவந்துள்ளது.

இதுபற்றிப் பொதுமக்களும், ஊடகங்களும் பலமுறை சுட்டிக்காட்டியும் எதுவித முன்னேற்றமும் இல்லாமல் குறைபாட்டுடனேயே காணப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, பிரபல பாடசாலைகள், தனியார் கல்விக் கூடங்கள் பொதுமக்கள் என பலரும் பயன்படுத்தும் இந்நூலகம் என்ன காரணத்துக்காக இத்தகைய குறைபாடுகளுடன் விடப்பட்டிருப்பதென்பது புரியாத புதிராக உள்ளதாக பலராலும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகத்திலேயே இந் நூலகம் இயங்குகிறது.

இந் நிலையில் இந் நூலகம் பலருக்கும் பயன்படும் வகையில் மிக நவீன வசதிகள் கொண்டதாக விரைவில் அமையவிருப்பதாக சபையின் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# வயோதிப பெண்மணி முதியோர் இல்லத்தில் இணைப்பு

(திருநெல்வேலி)

அநாதரவான நிலையில் வீதியில் அங்கும் இங்குமாக அலைந்து திரிந்து எவராலும் கவனிக்கப்படாதிருந்த வயோதிபர் ஒருவர் கைதடி முதியோர் இல்லத்தில் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை இணைக்கப்பட்டுள்ளார்.

புலோலி கிழக்கு, பருத்தித்துறையை சேர்ந்த வைரமுத்து பொன்னம்மா (வயது 62) என்பவரே இவ்வாறு இணைக்கப்பட்டவர் இவரது கணவர் மரணவிசாரணை அதிகாரியாக இருந்து பின்னர் இறந்து விட்டதாக இவர் கூறுகின்றார்.

யாழ்ப்பாணம் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு பொலிசாரால் இப் பெண் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதவான் இவரைக் கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்குமாறு உத்தரவிடப்பட்டதையடுத்து இவர் முதியோர் இல்லத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

தனது தந்தையின் பெயர் சுப்பிரமணியம் எனவும், தாய் வள்ளிப்பிள்ளை எனவும் கூறும் இவர் பற்றிய விபரங்கள், தகவல்கள் தெரிந்தால் அவர்களை அத்தியட்சகர், முதியோர் இல்லம், கைதடி என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (137)

# கணனி பயிற்சி

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி கண்ணகை அம்மன் சனசமூக நிலையம் சிறுவர்களின் கல்வி வளர்ச்சி கருதி கணனி பயிற்சியை அவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.


இப்பயிற்சிய்ய தொடரவிரும்பும் சிறுவர்கள் நிலையத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (08)

# முட்டை விலை வீழ்ச்சி கோழி வளர்ப்போர் பாதிப்பு

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் தற்போது முட்டை வில்ல சரிவடைந்த நிலையிலேயே விற்பனை செய்யப்படுகிறது. கோழித்தீவனங்களின் விலைகள் நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்வதால் தமக்கு கோழி வளர்ப்பில் எதுவித பிரயோசனமும் கிடைக்கவில்லை என கவலை தெரிவிக்கும் வர்த்த கர்கள் ஆலயங்களின் உற்சவங்கள் தற்போது முடிவுற்ற நிலையில் முட்டை விலை இனி சற்று அதிகரிக்கும் என தெரிவிக்கின்றனர். (150)

## வெள்ளி நற்சிந்தனை...



## பெரியபுராணத்து அடியவர்கள் - 01

பெரியபுராணத்தில் வரும்அடியவர்கள் மாறுபட்டவர்கள் சிவவேடத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தார்களே தவிர அந்த சிவ வேடத்தை அணிந்தவன் யார் என்ற ஆராய்ச்சியில் அவர்கள் போகவே இல்லை. இது உலகத்தில் மற்ற இலக்கியங்களில் பார்க்க முடியாத தனிச் சிறப்பாகும். எதிரே இருப்பவன் தீயவன். தன்னைக் கொல்ல வந்திருக்கிறான். தமக்குத் தீமை புரிய வந்திருக்கிறான். என்று தெரிந்தும் கூட அதுபற்றி கவலைப்படாமல் தாம் இது வரையில் எந்த சிவவேடத்திற்கு மரியாதை கொடுத்தார்களோ அந்தச் சிவவேடத்தை அணிநதிருக்கிறான் என்ற காரணத்தினால் அவன் என்ன செய்தாலும் அது பற்றிக் கவலை இல்லை. தங்களுடைய குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் இன்றியமையாதது என்று கருதினார்கள் என்பதைத பெரிய புராணம் சுட்டிக் காட்டுகின்றது.

பெரிய புராணத்தில் வரும் இரண்டொருவர் ஒரு புது வழியை மேற்கொண்டனர். தங்களுக்கு ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டார்கள் அந்தக் கொள்கை சரியா, தவறா, என்று ஆராய யாருக்கும் உரிமையே இல்லை. ஆகவே தாங்கள் வகுத்துக் கொண்ட கொள்கைப்படி வாழ்ந்து வந்தார்கள் என்றாவது ஒரு நாள் அந்தக் கொள்கைக்கு முட்டுப்பாடு வருமேயானால் உயிரை விடத்துணிகிறார்கள்.

ஏயர் கோன் கலிக்காம நாயனார் இந்த ஆராய்சசிக்கு எடுத்துக்காட்டாக நிற்பவர் வழிவழியாகத் தொண்டு செய்கின்ற தாங்களும் தங்கள் குடியும் இறையன்பில் தலை நிற்பவர்கள் என்ற எண்ணம் அவர்களுடைய மனத்தின் ஆழத்தில் இருந்திருக்கிறது. ஆகையினால் தான் இறைவன் கனவில் வந்து வயிற்று வலியை சுந்தரன் வந்து தான் போக்க முடியும் என்று சொன்னவுடன் "மற்றவன் இங்கு வந்து நோய் தீர்க்கும் முன்னர் நீங்காமலிருக்கும் பாதகச் சூலை நோயை இவ் வயிற்றினோடும் கிழிப்பேன் என்று சொல்லுகின்ற அளவுக்கு அவருடைய துணிவு போய்விட்டது. இது ஏயர் கோன் சிறந்த பக்தர் சிவனடியார் என்பதை உணர்த்துகின்றது. அதையாரும் மறுப்பதற்கில்லை.

அகங்காரம் மகாரப்மற்று அடியாராக வாழ்வதை விட்டு "நாங்கள் தான் உயர்ந்தவர்கள், நீ போய் ஆட்கொண்ட சுந்தரன் எங்களை விட ஒரு படி கீழ் என்று நினைக்கின்ற போ்து அந்த அகங்காரம் தலை தூக்குகிறது ஆகையால் அதற்குரிய தண்டனையாகத்தான் அவர் வயிற்றைக் கிழிக்கும் படியாக ஏற்பட்டது.

[தொடரும்]

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிறக்கப் பெட்டகம்

நான் 'மதம் என்பது மக்களின் அபின்' எனும் மார்க்சீயக் கருத்தில் நிற்பவன். ஆனால் மக்களின் அபின் என்பதோடு முடித்துக் கொள்ளும் பிற மார்க்சீயரைப்போல அல்லாமல், பேராசான் மார்க்சின் அடுத்த வரிகளான "மதம் இதயமற்ற உலகின் இதயமாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் பெருமூச்சாகவும் உள்ளது" என்னும் கவித்துவம் ததும்பும் வரிகளையும் மறக்காதவன். மற்றவர்களின் நம்பிக்கையில் நமக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களின் நம்பிக்கைகளை நாம் மதிக்க வேண்டும் என நம்புபவன் நான். குறிப்பாகப் பல் சமய, இன, மொழி மக்களுடன் வசிக்கும் போது இது மிக முக்கியம். அதிலும் குறிப்பாக minorities மத்தியில் நாம் இந்தப் பண்பை அதிகம் கடைபிடிக்க வேண்டும். மதச் சார்பற்ற நாடானாலும் கூட ஆட்சியில் உள்ளோர் ஒரு இஃப்தார் விருந்து அளிப்பதும், அவர்கள் அளிக்கும் விருந்தில் கலந்து கொள்வதும், அன்று ஒரு நாள், ஒரு சில மணி நேரம் அவர்கள் அளிக்கும் தொப்பியை அணிந்து கொள்வதும், அல்லது ஒரு சிறுபான்மைக் கலாச்சாரத்தினருடன் நடனமாடுவதும்.. ஓ.. எத்தனை அற்புதமான விசயங்கள்.

இந்தியாவின் முதலும் கடைசியுமான மதச்சார்பற்ற பிரதமர் நேரு ஒரு மிகப் பெரிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தன் திருமண அழைப்பிதழை உருது மொழியில் மட்டுமல்லவோ அச்சிட்டார். காலமெல்லாம் கடவுளில்லை, இல்லவே இல்லை எனக் கூவிக் கடவுளரின் சிலைகளை உடைத்துத் திரிந்த தந்தை பெரியார், பொது நிகழ்வுகளில் கடவுள் வாழ்த்துப் பாடும்போது எழுந்து நிற்கத் தவறமாட்டாரே.

ஒரு முறை மைசூரில் வீரப்பன் மனைவி கர்நாடக அரசால் சிறை வைக்கப்பட்டிருந்தபோது நாங்கள் சென்று அவரைச் சந்தித்துப் பின் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என அறிக்கை ஒன்றையும் அளித்தோம். அடுத்த நாள் ஓய்வாக இருந்தபோது திப்புவின் கல்லறைக்குச் சென்றோம். வழியில் ஒரு புகழ் பெற்ற இந்து ஆலயம். அங்கு சென்று சுற்றிப் பார்த்து வரும்போது எதிர்ப்பட்ட குருக்கள் கொஞ்சம விபூதியைத் தந்தார். அதை நானும் நண்பர் கோச்சடையும் வாங்கி நெற்றியில் பூசிக்கொண்டதைப் பார்த்து எங்களுடன் வந்திருந்த நண்பர் சிவகுருநாதன் அதிர்ச்சியடைந்தார். விமர்சிக்கவும் செய்தார். நான் ஒன்றும் பதிலளிக்கவில்லை. இன்றுவரை.

**– அ.மார்க்ஸ்**

இரயில் பிரயாணம் செய்யும்பொழுது மூன்றாம் வகுப்பில் தான் செல்வேன். அப்படி யாராவது வலுக்கட்டாயம் செய்து முதலாவது, இரண்டாவது வகுப்பு வண்டிகளில் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தினார்களானால் நான் அவர்களிடம் சரி என்று சொல்லிவிட்டு முதலாவது அல்லது இரண்டாவது வகுப்புக்கு உள்ள பிரயாணச் சீட்டின் கட்டணத்தை வாங்கிக்கொள்வேன். ஆனால், பிரயாணச் சீட்டு வாங்கும் பொழுது மூன்றாவது வகுப்புக்கு வாங்கிக்கொண்டு மீதி உண்டாகும் தொகையைப் பத்திரமாக முடிபோட்டு வைத்துக்கொள்வேன்.

ஏனெனில், அவசியமற்ற காரியத்துக்காகப் பணத்தை வீண் விரயமாக்குவது என்பது எனக்கு வெறுப்பானதும், பிடித்தமில்லாதது மானதாகும். காசு கையில் சிக்கிக் கொண்டது என்பதற்காகத் தேவையற்றதை அனுபவிக்க ஆசைப்படுவதா? இப்போதைய புதுப் பணக்காரர் பலர் இப்படித் தான் செய்து பணத்தைப் பாழாக்குகிறார்கள். நான் காங்கிரசுத் தலைவனாக இருக்கும்போதும் 3–ம் வகுப்பிலும், கட்டை வண்டியிலும்தான் செல்வேன். சுய மரியாதை இயக்கத் தலைவனாக இருந்தபோதும் கண்ணப்பர் செகண்ட் கிளாசில் வருவார். நான் கூடவே தேர்ட் கிளாசில் போவேன். ஆச்சாரியார், திரு.வி.க., டாக்டர் நாயுடு செகண்ட் கிளாசில் வருவார்கள். நான் தேர்ட் கிளாசில்தான் போவேன்.

**– ஈ.வெ.ரா.பெரியார்**

நான் வெற்றியைக் கண்டு பயப்படுகிறேன். ஒருவர் வெற்றி அடைந்து விட்டார் என்றால் அவருடைய வேலை பூமியில் முடிந்து விட்டது என்று அர்த்தம். ஆண் சிலந்திப் பூச்சி, பெண் சிலந்திப் பூச்சியுடன் கூடி கலந்து வெற்றியடைந்ததும், பெண் சிலந்தி அதை கொன்று விடுகிறதல்லவா... அதுபோல், வெற்றியை அடைந்து முடிவதை விட, வெற்றியை நோக்கி ஓடிக் கொண்டேயிருப்பதை நான் விரும்புகிறேன். நான் அடைய நினைப்பது, என் முன்னேயிருந்து கொண்டேயிருக்க வேண்டும்; பின்னால் அல்ல! **– பெர்னாட்ஷோ**

# யாழ்.போதனா வைத்தியசாலையில் முகச்சீராக்கல் சிகிச்சை நிலையம்

## வைத்திய நிபுணர் சத்தியகுமார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முகச்சீராக்கல் சிகிச்சை செய்வதில் மக்களுக்கு விழிப்புணர்வுகள் இல்லாத காரணத்தால், இந்த சிகிச்சை தொடர்பில் அவர்கள் ஆர்வமின்றி உள்ளதாக யாழ்.போதனாவைத்தியசாலையின் பல், முகச்சீராக்கல் விசேட வைத்திய நிபுணர் ப.சத்தியகுமார் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல், முகச்சீராக்கல் சிகிச்சை நிலையம் ஒன்று கடந்த ஒரு வருட காலமாக இயங்கி வருகின்றது. இருந்தும் இந்த நிலையம் யாழில் அமைந்துள்ளது தொடர்பில் பொதுமக்கள் பலருக்கு தெரியாது.

இந்நிலையம் தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம் சரியாக இல்லை. வட்மாகாணத்தில் இருக்கின்ற ஒரேயொரு முகச்சீராக்கல் நிலையம் யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்த சிகிச்சை நிலையத்தில் அண்ணப்பிளவு, உதட்டுப்பிளவு, தாடைப்பிளவு, மிதப்புப்பல், பல் அடைத்தல், நிரந்தர பல் கட்டுதல் உள்ளிட்ட சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னர் இந்தியாவிற்கு சென்று அதிக பணம் செலவு செய்து செய்யவேண்டிய இந்த சிகிச்சை, தற்போது யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

முதியோர்களுக்கு புதன்கிழமைகளிலும், மாணவர்களுக்கு சனிக்கிழமைகளிலும் 8 மணி தொடக்கம் 12 மணிவரையில் சிகிச்சையளிக்கப்படுவதுடன், மற்றவர்களுக்கு அனைத்து நாட்களிலும் சிகிச்சை அளிக்கப்படுகின்றன. இந்த நிலையத்தில் முகச்சீராக்கல் சத்திரசிகிச்சை நிபுணர்கள் இல்லாத குறை காணப்படுகின்றது.

அத்துடன், வளப்பற்றாக்குறையும் காணப்படுகின்றது. வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய தனியார், தொண்டர் அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள் உதவிகள் செய்ய வேண்டும்.

வளப்பற்றாக்குறையால் எக்ஸ் - றே உள்ளிட்ட சில தொழில்நுட்ப சேவைகளை கொழும்பிற்கு சென்று பெறவேண்டிய தேவைகள் இருக்கின்றன. முகச்சீராக்கல் சத்திரசிகிச்சை செய்யும் வைத்தியர்கள் வடமாகாணத்தில் இல்லை. ஆனால் தென்னிலங்கையில் பிரதேச வைத்தியசாலைகளிலும் இந்த வைத்தியர்கள்



இருக்கின்றனர் என்றார்.

மூக்கினால் கதைப்பவர்களுக்கு மொழி நடைகளை பயிற்றுவிக்கும் வைத்திய நிபுணர் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றுகின்றார். இவ்வைத்தியர், முகச்சீராக்கலுடன் தொடர்புபட்ட வைத்தியர். ஆனால், கிளிநொச்சி வைத்தியசாலையில் முகச்சீராக்கல் நிலையம் இல்லை.

யாழில் முகச்சீராக்கல் நிலையம் இருக்கின்றது. ஆனால் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லை. ஆகவே கிளிநொச்சியில் கடமையாற்றுபவரை யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்ய வேண்டும். மேலும் சில முகச்சீராக்கல் சத்திரசிகிச்சை நிபுணர்கள் யாழ்ப்பாணத்துக்கு நியமிக்கப்பட வேண்டும் என விசேட வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார்.

# மகளிர் விடுதிக்குள் புகுந்த பல்கலை மாணவர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவியர் விடுதிக்குள் நள்ளிரவு தாண்டிய நேரத்தில் அத்துமீறி நுழைந்த மாணவர்கள் நான்கு பேர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவியர் விடுதி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவினால் அண்மையில் திறந்து வைகக்கப்பட்டிருந்தது.

குறித்த விடுதி பாதுகாப்பு குறைபாடுகளுடன் இருப்பதாக தெரிவித்து நிகழ்வுக்கு வருகை தந்த அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவுக்கு மாணவர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். எனினும் மாணவியர் விடுதி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும், வெளியார் யாரும் அத்துமீறி பிரவேசிக்க முடியாத வகையில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதாகவும் உயர்கல்வி அமைச்சும், பல்கலைக்கழக நிர்வாகமும் வலியுறுத்தியிருந்தன. இந்நிலையில் நள்ளிரவு தாண்டிய நேரத்தில் நான்கு மாணவர்கள் பல்கலைக்கழக மாணவியர் விடுதிக்குள் நுழைந்திருந்த நிலையில் நிர்வாகத்திடம் மாட்டிக் கொண்டுள்ளனர்.

தற்போது அவர்கள் கற்றல் நடவடிக்கைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலும் மாணவர்களை தனது அறைக்கு வரவழைத்த மாணவிக்கும் விடுதி வசதி இரத்துச் செய்யப்பட்டுள்ளது

# கரைத்துறைப்பற்று பிரதேச சபையில் ஆளணிப்பற்றாக்குறை அதிகம்


முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச சபையில் ஆளணிப்பற்றாக்குறை காணப்படுவதாக பிரதேச சபையின் செயலாளர் சு.ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச சபையில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இல்லாமையினால், அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் செயலாளரின் தலைமையிலேயே இடம்பெற்று வருகிறது. எமது சபையின் கீழ் ஐந்து உப அலுவலகங்கள் இயங்குகின்ற போதிலும், பிரதான அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கு போதியளவு ஊழியர்கள் இல்லை.

மேலும், தொழிலாளி, காவலாளி, முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாரதிகள், மின்னிணைப்பாளர்கள் என பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

எனவே, எமது சபையில் காணப்படும் வெற்றிடங்களை நிவர்த்தி செய்து கொடுத்தால், மக்களுக்கு தற்போது செய்யும் பணியை விடவும் மேலும் கூடுதலான பணிகளைச் செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# பரமர் சங்கமம்

ஆத்தையின் பாடுஎன்னவோ குத்தியன் எதற்காகவோ குத்தி முறிகிறான்" எண்டது போலத்தான் கிடக்கு எங்கட ஓட்டு வேட்டைக்காரரின் குத்தி முறிதலும் இல்லையே பின்னை. போன மாதக் கடைசியிலை 29 ஆம் திகதி புதன்கிழமை பதுளை மாவட்ட கொஸ்லந்த அவலம் ஏற்பட்டது.

முதல் வந்த செய்திகளில் 100 பேர்கள் வரை மண்சரிவால் இறந்திருக்கலாமெண்ட ஊகம் 150 பேர்கள் 200 பேர்களென விசம் போல கூடிக் கூடி 30 ஆம் திகதிய பேப்பர்களில் 400 பேர்களென உயர்ந்து போனது. பல் எக்கர் நிலங்களைக் கபளிகரம் செய்த மண்சரிவை உயரத்தில் இருந்துபடமெடுத்தும் போட்டிருந்தார்கள்.

ஒரு அருவி ஆறாகி வருவது போலக்காணப்பட்டுது. இறுதியாகத் தரவுகள் எடுக்கப்பட்டதால் 38 பேர்கள் மட்டுமே அந்த அனர்த்தத்தில் அகப்பட்டிருந்ததே என்ற உண்மை தெரிவிக்கப் பட்டது இதற்கிடேல்லை நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட ஒரு சில நல்லவர்களோடை புல்லுருவிகளும் நுழைந்து கொண்டதும் பிரசித்தமானது.

அதில் ஓட்டுவேட்டைக்காரர்கள் ஒருதரை ஒருவர் சிண்டு முடிஞ்சுதேம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒருகாலமுமே மலையகத்தைத் தேடாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பரிவாரங்களோடை அங்கு சென்றது. இவர்கள் அங்கை போனதும் இவ்வளவு காலமும் மலையக மக்களை ஏமாற்றி வந்த கோஷ்டிக்கு கடுப்பேறிப் போச்சு.

வடபகுதியில் காணிக்காக மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு மலையக மக்களுக்குக் காணி வழங்கப்பட வேண்டும் அதற்கான முஸ்தீபில் கூட்டமைப்பு இறங்கப் போவதாகவும் வாய்சவாடல் விட்டதை செந்தில் தொண்டமானுக்கு வயித்தைக் கலக்கி விட்டது.

வடக்கில் காணி உரிமை இல்லாதோர் மலையக மக்களுக்கு காணி வழங்கப் போவதாகக் கூறும் கூட்டமைப்பின் போலி முகமூடியைக் கிளித்தெறிய வரிஞ்சு கட்டியது கொஸ்லாந்தை மீரியபெத்தவில் அனர்த்தத்துள் அகப்பட்டுக் கொண்ட மக்களின் அவலங்களோ வேறை இவையளின் பிடிபாடுகளோ வேறை.

பாதிப்புக்கு ஆளான மக்களின் உடனடித் தேவைகளை சக்தி வாய்ந்த ஒலிபரப்பூடகமொன்று பொதுமக்களிடம் சேகரித்த நிவாரணப் பொருட்களை எடுத்துச் சென்று ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கையில் இன்னொண்டோ ரெண்டோ ஒலிபரப்பு ஊடகங்கள் வேறுவிதமாகத் திசை திருப்பிக் கொண்டிருந்ததேம் இங்கநாட்டில் காணமுடிஞ்சுது.

பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு இதய சுத்தியோடை சேவை செய்யவந்தவையைக் காணப்பெரும்பாடா இருந்திச்சு ஆத்தை என்னத்துக்கோ மல்லுக்கட்ட குத்தியன் என்னத்துக்கோ குத்தி முறிஞ்சமாதிரியெல்லே இருந்தது சொல்லுங்க பாப்பம்.

# கட்டுமீறும் குற்றச்செயல் தடுத்து நிறுத்த இரவு ரோந்து

(யாழ்ப்பாணம்)

ஏழாலை பகுதியில் இடம்பெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் இரவுநேர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.டி.எல். துஷ்மந்த தெரிவித்தார்.

ஏழாலை பகுதியில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள், கைகலப்புக்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

இதனால், அப்பகுதியில் தற்காலிக பொலிஸ் கண்காணிப்பு நிலையத்தை அமைதது குற்றச்செயல்களை கட்டுப்படுத்த ஆவன செய்யுமாறு அப்பகுதி சிவில் பாதுகாப்புக் குழுக்கள் சுன் னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கடந்த வாரம் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்தக் கோரிக்கை தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஏழாலை பகுதியில் குற்றச்செயல்கள் அதிகரித்தமையையடுத்து பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதனால், சில வாரங்களாக குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன என்று அவர் கூறினார்.

மேலும், குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தும் நடவடிக்கைகளும் பாரபட்சமின்றி மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# "எங்களுக்கு வேணும்" விழிப்புணர்வு நாடகம்



சிறுவர் நன்நடத்தை திணைகளம் மற்றும் சேவாலங்கா ஆகியவற்றின் நிதி அனுசரணையில் வவுனியா பிரதேச செயலகத்தினால் "எங்களுக்கு வேணும்" என்னும் சிறுவர் விழிப்புணர்வு வீதி நாடகம் நடாத்தப்பட்டு வருகிறது.

வவுனியா பிரதேச செயலகத் திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள சிறுவர் தொடர்பான பிரச்சனைகளை கட்டுப்படுத்தும் முகமாக, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சிறுவர்களை விட்டு தாய் வெளி நாடு செல்லல், சிறுவர் துஷ் பிரயோகம் என்பவற்றை கட்டுப்படுத்தும் வகையில் விழிப்புணர்வூட்டும் வீதி நாடகம் நேற்று முன்தினம் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட உதவி பிரதேச செயலாளரும் எழுத்தளா ருமான திருமதி எஸ்.கர்ணன் தெரிவிக்கையில்,


பெற்றோர்கள் பலதார திருமணம் செய்து கொள்வதால் அவர்களின் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றார்கள்.

அத்துடன் தாய் தகப்பனின் அரவணைப்பு குழந்தைகளுக்கு கிடைக்காமல் போகின்றது. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத காரணத்தால் குழந்தைகள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்படுகின்றது. எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இவ் வீதி நாடக ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலாளர் கா.உதயராசா, உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.கர்ணன், கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


34.  அடைப்பினுள் சமஅளவில் காணப்படும் உருக்கள் எவை?

1) ♦✣✿ 2) ♦✣✿ 3) ✣✣✿

35. தராசில் உள்ள சீனியின் நிறை 1kg இலும் 
1) கூடியது 2) குறைந்தது 3) சமமானது


36. 25ஆம், 50ஆம், 60ஆம் ஆண்டுகளில் கொண்டாடப்படும் விழாக்களை காட்டும் விடையின் கீழ் கீறிடுக
1) வெள்ளிவிழா, மணிவிழா, பொன்விழா
2) பொன்விழா, வைரவிழா, பவளவிழா
3) வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா

❖ சிலபாத்திரங்களின் கொள்ளளவுகளை காட்டும் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது




37. பாத்திரம் C ஐ நிரப்புவதற்கு பாத்திரம் Bயினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?
1) 2 தடவை 2) 4 தடவை 3) 5 தடவை

38. பாத்திரம் A ஐ நிரப்புவதற்கு D யினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்
1) 10 தடவை 2) 5 தடவை 3) 4 தடவை

39. 

இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண் யாது?

1) 24 2) 20 3) 19

❖ வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க


40. கடலுக்கு - கப்பல் எனின் ஆற்றுக்கு ..................................
1) கரை 2) மீன் 3) தோணி

41. கல் - குவியல் எனின் பல் - ..........................
1) வரிசை 2) கட்டு 3) கூட்டம்

42. 23.50 கடிகாரம் காட்டும் நேரத்திற்கு கொழும்பு விமான நிலையத்தை வந்தடைய வேண்டிய விமானம் 20 நிமிடங்கள் தாமதித்தே வந்தடைந்தது விமானம் வந்தடைந்த நேரம் யாது?
1) 24.10 2) 12.10 3) 00.10

43. பேருந்து ஒன்றில் 48 பேர் பயணம் செய்தனர். அதில் அரைவாசி பேர் ஆண்கள் மிகுதியில் $\frac{2}{3}$ பங்கினர் பெண்கள் ஏனையோர் சிறுவர்கள் பேருந்தில் பயணம் செய்த சிறுவர்கள் எத்தனை பேர்?
1) 6 பேர் 2) 9 பேர் 3) 8 பேர்

44. முதலில் தரப்பட்டுள்ள உருக்களை ஒன்றின் மீது ஒன்று வைக்கும் போது தோன்றும் வடிவம் யாது?




45. கரனை விட விஷால் உயரம் குறைந்தவன் நிமலனை விட கரன் உயரம் குறைந்தவன். இவர்களில் உயரமானவர் யார்?
1) நிமலன் 2) கரன் 3) விஷால்

46. சதுரம் ஒன்றின் பரப்பளவு 1 சதுர cm ஆகும். சதுரத்தின் சுற்றளவு யாது?
1) 1 cm 2) 4 cm 3) 2 cm

47. அதிகமானவர்கள் புத்தகங்களை படிப்பது
1) அறிவைப்பெற 2) பொழுதுபோக்குக்காக 3) வாசிப்பு திறனை அதிகரிப்பதற்காக

48. 2012 ஆம் ஆண்டு 30வது ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. எனின் 2020 ஆம் ஆண்டு எத்தனையாவது ஒலிம்பிக்போட்டி நடைபெறும்?
1) 38ஆவது 2) 32ஆவது 3) 35ஆவது

49. ☐ - 9 + 3 = 10 எனின் வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய எண் யாது?
1) 16 2) 18 3) 15

பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்




## தரம் -4 பரீட்சை முன்னோடி- 2014


பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு




1. ● 1ஆம், 2ஆம் வினாக்களில் வித்தியாசமான உருவின் கீழ் கோடிடுக

01. 1)  2)  3) 

02. 1)  2)  3) 

3ஆம் 4ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்கு வரவேண்டிய உருவை தெரிந்து கோடிடுக

03. காலையில் .......................................... கூவின
1.  2.  3. 

04. சத்தியசோதனை ........................... இன் சுயசரிதை நூலாகும்
1.  2.  3. 

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக

05. மழைநாள் ஒன்றில் காணக்கூடியது
1) வெள்ளம் ஓடும் வீதிகள் 2) தெளிவான வானம் 3) வாடிவதங்கிய பயிர்கள்

06. நேற்று புதன்கிழமை எனின் நாளை மறுநாள் என்ன கிழமை?
1) வெள்ளிக்கிழமை 2) சனிக்கிழமை 3) ஞாயிற்றுக்கிழமை

07. $* + 6 = 19$
$* - 5 = 8$
* இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 13 2) 15 3) 11

❖ கட்டத்தில் உள்ள ஆங்கில எழுத்துக்களின் உதவியுடன் 8ஆம், 10ஆம் வினாக்களுக்கு விடையை தெரிக.

MRKTVRPJMRTUPMJS

08. இங்கு ஒரு தடவை மாத்திரம் வந்துள்ள எழுத்துக்களில் எத்தனை உள்ளன?
1) 4 2) 3 3) 5

09. இங்கு R என்ற எழுத்தை தவிர வேறு எத்தனை எழுத்துக்கள் உள்ளன?
1) 12 2) 13 3) 15

❖ அட்டவணையில் உள்ள தொடர்பை அவதானித்து A,B எழுத்துக்கள் உள்ள இடத்தில் வரவேண்டிய பிராணியை தெரிவு செய்க.

10.

| | | |
|---|---|---|
| குயில | A | கிளி |
| தேன | எறும்பு | B |

1) மைனா, கரப்பான
2) முதலை, வண்ணத்து பூச்சி
3) மயில, எலி

11. வெற்றுக்கூண்டினுள் வரவேண்டிய நிறை யாது?
300g + 250g + ☐ = 700g
1) 150g 2) 200g 3) 250g

12. 2 6 8 + 3☐4 = 5 8 2 வெற்றுக்கூட்டத்தினுள் வரவேண்டிய எண் யாது?
1) 1 2) 2 3) 0


13. 
இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி யாது?
1) $\frac{2}{3}$ 2) $\frac{2}{6}$ 3) $\frac{1}{5}$


14. இன்று இடியுடன் கூடிய மழை பெய்தது ஆகவே நாளை
1) மழை பெய்யும் 2) மழை பெய்யாது 3) மழை பெய்யலாம்

❖ 15 ஆம், 16ஆம் வினாக்களில் அடுத்து வரும் சொல்லை கண்டுபிடித்து கோடிடுக.

15. அருவம் → உருவம் → பருவம் → ☐
1) வடிவம் 2) புருவம் 3) அரும்பு

16. தம்பதி → பதிகம் → கம்பளி → ☐
1) பம்பரம் 2) கம்பம் 3) பளிங்கு

17. உருவை பூரணப்படுத்த தேவையான பகுதியை தெரிவு செய்க


18. வெற்று அடைப்புக்கு பொருத்தமான உருவை தெரிவு செய்க


19. பாடசாலை ஒன்றில் 368 மாணவர்கள் கற்கின்றனர். அவர்களில் 173 பேர் பெண்கள் எனின் பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்?
1) 186 2) 195 3) 174


❖ கீழ் தரப்பட்ட உருக்களின் பெறுமதிகளை கொண்டு 21ஆம், 22ஆம் வினாக்களுக்குரிய விடையை தெரிவு செய்க
●+● = 24 ■+■ = 26 +×■ = 27


20. + இவ்வுருவின் பெறுமதி யாது?
1) 3 2) 9 3) 4

21. ●+■++ க்கு பொருத்தமான பெறுமதி யாது?
1) 25 2) 31 3) 29



22. 3,6,5 ஆகிய மூன்று இலக்கங்களையும் பயன்படுத்தி ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமான மூன்று இலக்கங்களை கொண்ட எத்தனை எண்கள் எழுதலாம்?
1) 6 2) 3 3) 7

23. செங்கோணம் உள்ள உருவை தெரிவு செய்க


24. 0.3 பங்கு நிழற்றப்பட்ட உருவை தெரிக


25. மாவின் விலை அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் அல்லாதது
1) பாணின் விலை அதிகரிக்கும்
2) போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கும்
3) உணவுப்பொருட்களின் விலை அதிகரிக்கும்


26. நிறை,விலை,மலிவு என்னும் சொற்கள் அதிகளவில் பயன்படுத்தப்படும் இடம்
1) வங்கி 2) நூலகம் 3) சந்தை

❖ பாடலின் உதவியோடு வினாக்களுக்கு விடை தருக

> செக்கச்சிவந்திருக்கலாம் வானம் - அப்போ
> சிறகடித்து மனை திரும்புமாம் பட்சி
> முல்லை மலர்கள் பூத்தது போல வானில்
> விண்மீன்கள் கண் சிமிட்ட தொடங்குமாம்

27. இப்பாடலில் நாள் ஒன்றின் எவ்வேளை பற்றி கூறப்படுகின்றது?
1) காலைவேளை 2) மாலைவேளை 3) இரவுவேளை

28. பாடலில் மனை என கூறப்படுவது எது?
1) வீடு 2) கூடு 3) நாடு

29. தவறான முறையில் நேரம் குறிக்கப்பட்டிருக்கும் கடிகார முகத்தை தெரிவு செய்க


30. நீர்த்தாங்கி ஒன்றில் இருந்து நிமிடத்திற்கு 50ml நீர் கசிந்து வெளியேறுகின்றது தாங்கியிலிருந்து 30 நிமிடத்தில் வெளியேறும் நீரின் அளவு யாது?
1) 150ml 2) 1150ml 3) 1500ml

31. அட்டவதானி எனப்படுபவர்
1) ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்க கூடியவர்
2) பிறர் நலனை கருத்தில் கொண்டு வாழ்பவர்
3) நகைச்சுவையாக கவிபுனையும் ஆற்றல் உடையவர்

32. நூதனசாலை என்பது
1. பொருட்கள்,பண்டங்கள் சேமித்து வைக்குமிடம்
2. பழமை வாய்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைக்குமிடம்
3. பொருட்கள் உற்பத்தி செய்யும் இடம்

33. நிமலியின் அப்பா எனது அம்மாவின் தம்பி எனின் நிமிலியின் அப்பா எனக்கு என்ன உறவு முறை?
1. சிற்றப்பா 2) மாமா 3) பெரியப்பா

# நீரை வீணாக்காது சேமிப்பதன் மூலமே குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**நிலத்தடி நீரைகுடிநீராக பயன்படுத்த முடியாத யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மக்கள் நரை வீண்விரயமாக்காது சேமிக்க வேண்டும் அதன் மூலமே குடிநீர் பிரச்சினையை தீர்க்க முடியும் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிமை நடைபெற்ற நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு மற்றும் நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சு ஆகியவற்றின் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி மக்களுக்கும் விவசாயிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இரணைமடுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம் அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஏனைய குளங்களை விஸ்தரித்து அவற்றை புனரமைக்க வேண்டும் எனவும் நாம் சிந்திக்கின்றோம் அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்

பொதுவாக வடக்குமாகாணம் குடிநீர்ப் பிரச்சினையால் அதிக பாதிப்புள்ள ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. அதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்கள் மிகப்பெரிய குடிநீர்ப்பிரச்சினையை எதிர்கொண்டுள்ளன. நிலத்தடி நீரைக் குடிநீராகப் பயன்படுத்த முடியாத ஒரு நிலை இந்த மாவட்டங்களில் உருவாகியுள்ளது.


ஆகவே, நீரைச் சேமிப்பதன் மூலமாகவே இந்த மாவட்டங்களில் நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். எதிர்காலத்தில் இதையும் விட அதிகமான மக்கள் தொகை பெருகும். எனவே, அந்த மக்களின் குடிநீர்த் தேவையை ஈடுசெய்யக்கூடிய திட்டங்கள் குறித்து இப்பொழுது நாம் கவனம் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

இரணைமடு - கிளிநொச்சி - யாழ். குடிநீர்த்திட்டம் சாத்தியமானால் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் கிடைக்கக்கூடியதாக இருக்கும். அது நல்ல குடிநீரைத் தேடி அவதிப்படும் மக்களின் நீண்டகாலத் துயரத்தைப் போக்கி அவர்கள் சுயமாக நிற்கக்கூடிய நிலையை உண்டாக்கும்.



அவர்கள் காலந் தோறும் நல்ல தண்ணீருக்காகப் பட்டுக் கொண்டிருக்கும் அவலமும் அவமானமும் நீங்கும். இதற்காக அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 22,000 மில்லியன் ரூபாய்களைக் கடனாகப் பெற்று ஒதுக்கியபோதிலும் இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் இன்னமும் முடிவுகள் ஏட்டப்படவில்லை. இது ஒரு மிகத் துரதிஷ்டமான நிலைமையாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரு காலத்தில் யாழ்பபாணத்தின் தீவுப் பகுதிகளிலிருந்து நீரும் தொழிலும் இல்லாமல் கிளிநொச்சிக்கு வந்து குடியேறியோரின் வாரிசுகளில் சிலரே இன்று இந்த மாவட்ட தீவுக்குத் தண்ணீரைக் கொண்டு செல்லவேண்டாம் என்று எதிர்க்கின்றார்கள்.

இரணைமடு விலிருக்கும் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நீர்த் தேவை யைப் பூர்த்தி செய்த் பிற்பாடே யாழ்ப்பாணத் துக்கு குடிநீர் எடுத்துச் செல்லப் படும் என்று உத்தரவாதம் வழங்கிய பின்னரும் குழப்பங்களும் தயக்கங்களும் தீரவில்லை. இதற்குக் குறுகிய அரசியல் உள் நோக்கங் கொண்ட சிலரே காரணமாக இருக்கின்றார்கள் என அவர் தெரிவித்தார்



கதிரொளி மாதர்சங்கத்தினரின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவி தொடர்பான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் தலைமையில் இடம்பெற்றது.

# உதவிப்பணம்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவி மற்றும் சேமிப்பு உதவிக் கொடுப்பனவு பெறுபவர்கள் மார்கழி மாதத்துக்கான உதவிக் கொடுப்பனவை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் கொடுப்பனவை 12 ஆம் திகதி வரை தாங்கள் உதவிப் பணம் பெற்று வரும் தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாமென பிரதேச செயலர் ம.பிரதீப்ன் தெரிவித்துள்ளார். (8)



# பொதுவாழ்விலும் நீதிமன்றிலும் முன்னுதாரணமானவர் திருநாவுக்கரசு

## அனுதாபச் செய்தியில் நீதிபதி ம.கணேசராசா தெரிவிப்பு

பொதுவாழ்விலும் சரி நீதிமன்றிலும் சரி மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கி எமக்கு நல்ல பல விடயங்களை கற்றுத்தந்து இன்று அமரத்துவம் அடைந்துவிட்ட முத்தையா திருநாவுக்கரசு ஐயாவின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ம.கணேசராசா தனது அனுதாப செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

நிஜ வாழ்க்கையில் நல்ல மனிதர்களை புரிந்து கொள்வது மிகவும் கடினம் நல்லதுக்கு காலமில்லை என்று சொல்வார் கள். எல்லாம் நன்மைக்கே என்று ஆன்மீகவாதியாக வாழ்ந்த மனிதர் திருநாவுக்கரசு ஐயா நாவுக்கு அரசனாகவே நான் நீதிமன்றிலும் பொது வாழ்விலும் அவரைக் கண்டிருக்கின்றேன். நீதி பிழைத்தால் அது யாரென்று பாராமல் தட்டிக்கேட்கும் குணமும் நல்ல விடயங்களை மனம் திறந்து பாராட்டும் பண்பும் குற்றங்களை கடியும் குணமும் திருநாவுக்கரசர் ஐயாவிடம் இயல்பாகவே குடி கொண்டிருந்ததை நான் கண்டேன்.

நறுக்கென்று பதில் சொல்லும புத்திசாலித்தனமும் நீதிபதிகளை புரிந்து கொண்டு வழக்காடும் விவேகமும் மக்களின் உணர்வுகளை மதிக்கும் பண்பும் அவருக்கே உரித்தான பண்புகள் வற்ற வற்றக்குறையாத் சொல்வளமும், நகைச்சுவையும் திருநாவுக்கரசு ஐயாவிடம் கண்டளவிற்கு வேறு எந்த சட்டத்தரணியிடமும் நான் கண்டதில்லை. சிரிக்க வைக்க வேண்டும், மகிழவைக்க வேண்டும் என விரும்புகின்ற மனம் எல்லோரிடமும் வருவதில்லை. திருநாவுக்கரசு ஐயாவிடம் இயல்பாகவே அவ்வியல்பு குடிகொண்டிருந்தது.

அவருடைய புத்திரர்கள் மூவரும் தமது துறையிலே சிறப்பாகப் பணியாற்றி தன்னிகரற்ற சேவையை மக்களிற்கு வழங்கி கொண்டிருக்கின்றார்கள். கணபதி பக்தனான நாவுக்கரசு சாத்திரம் சொல்வதிலும் வல்லவர் ஒவ்வொரு வியாழனும் கணபதிக்கு விரதமிருந்து வாருங்கள் எனக்கூறி என்னை விரதமிருக்க வைத்தவர் நாவுக்கரசர்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாயிருந்து பிரியாவிடை பெற்றுச் செல்கின்ற போது எனக்கு புகழ் மாலை சூட்டியவர் சொல்வேந்தன் நாவுக்கரசர் உலகம் ஆயிரம் சொன்னாலும் தனக்கென்று தனிப்பாதை வகுத்து கம்பீரமாய் நடந்த நாவுக்கரசனுக்கு எனது கண்ணீர் அஞ்சலிகளை காணிக் கையாக்குகின்றேன் என்றார்.

# இன்று நல்லூரில் இயம சங்காரம்

உலக இயக்கத்தின் மூலகாரணராக விளங்குகின்ற இயமதர்ம ராஜனின் சங்கார நிகழ்வு ஐப்பசி வெள்ளிக் கிழமையில் மாலை நேரத்தில் நல்லூரில் நடைபெறுகின்றது. வருடந்தோறும் கிடைசி ஐப்பசி வெள்ளியன்று நிகழ்கின்ற இந்த இயமசங்காரம் யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவில் முன்றலில் பெருந்திரளான அடியார்கள் மத்தியில் இன்று சிறப்பாக இடம்பெறவுள்ளது.

சிவபக்தரான மிருகண்டு முனிவரின் முதல்வன் மார்க்கண்டேயர் தமது வாழ்நாள் முடிவைக் கருதி இயமன்வந்து உயிர் கவராமல் காத்தருளுமாறு சிவலிங்கப் பெருமானிடம் முறையிட்டார். இன்றுடன் தம்து வாழ்வு அஸ்தமிக்கும் என்பதை முன்னரே அறிந்து கொண்ட மார்க்கண்டேயர் எல்லாம் வல்ல சிவ பெரு மானிடம் தம்மை இயமனிடமிருந்து காத்தருள் புரிய வேண்டுமென்று வேண்டுதல் செய்து சிவபூசை செய்தார்.

உலகைக் காக்கும் பரம்பொருளான சிவபொருமானும் இம்மார்க்கண்டேயரின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தார். சிவலிங்கப் பெருமானுக்குப் பூஜை செய்து கொண்டிருந்த மார்க்கண்டேயரின் இன்னுயிர் கவரஎண்ணிய இயமன் கொஞ்சமும் பயமில்லாமல் பாசக் கயிற்றை வீசி எறிந்தார்.

இயமன் வீசிய பாசக்கயிறு சிவலிங்கப் பெருமானையும் சேர்த்த படியே



மார்க்கண்டேயர் மேல் வீழ்ந்தது. உடனே தம்மையும் ஒன்றாகச் சேர்த்து உயிர்க்வரும் கயிற்றை வீசியதால் சீற்றங் கொண்ட சிவன், லிங்கத்தினின்றும் வெளிப்பட்டு இயமனைக் காலால் உதைத்து அவனைச் சங்காரஞ்செய்தார். காலனுக்கே காலனாக வந்தமையால் சிவனுக்குக் காலகாலன் என்ற காரணப் பெயர் வந்தது.

இயமன் சங்கரிக்கப்பட்டதால் உலகில் உயிர்கவரும் வேலை ஸ்தம்பித்து விட்டது. சகல ஜீவராசிகளும் இறக்காமல உயிர் வாழ்தலால் பூமிபாரம் ஏற்பட்டது. பூமாதேவி பாரம் தாங்க முடியாமல் பிரம்ம தேவரிடம் முறையிட்டார். உடனே பிரம்மதேவர் சிவபெருமானுக்கு விடயத்தைத் தெரியப்படுத்தினார் இதைக் கேட்ட சிவபெருமான் தம்மால் உதைக்கப்பட்டு இறந்துபோன இயமதர்மராஜனுக்கு உயிர்ப் பிச்சையளித்தார்.

உயிர்பெற்றெழுந்த இயமதர்மராஜன் தான் செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு பணிவோடு வேண்டி நின்றான். சிவபெருமானும் "இயமதர்மராஜனே! நீ தொடர்ந்து உனது வேலையைச் செய்து வருவாயாக" என்று அபயமளித்தார்.

அந்த வகையில் உலக இயக்கம் நல்ல முறையில் தொடர்ந்தது. பூமாதேவியும் ஆறுதலடைந்தார். இந்தக் கதையை விமர்சித்து விளக்குவதே இன்றைய இயமசங்காரம் ஆகவே அடியார் பெருமக்கள் அனைவரும் இன்று நிகழும் இயமசங்காரத்தைக் கண்டு தரிசித்து எம்பெருமானுடைய திருவருளுக்குப் பாத்திரமாகி உய்திபெற்று வாழ்வார்களாக.

**தெய்வத்தமிழ்ச் சுடர்**
**இராசையா ஸ்ரீதரன்**

# கவிதை பயிலரங்கு

கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கவிதைப் பயிலரங்கு கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது. முதல் நாள் நிகழ்வின் ஆரம்ப உரையை கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் வழங்கினார்.

கவிதை பற்றிய அறிமுகம் என்ற பொருளில் மூத்த கவிஞர் சோ.பத்மநாதனும் இலங்கை தமிழ்க் கவிதை வரலாறு என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கப் பொருளாளருமாகிய ச.லலீசன் தமிழ் மரபுக் கவிதைகள் என்ற பொருளில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் ச.பிரேமினி ஆரம்ப உரை நல்கினார். தமிழ்க் கவிதைகள் என்ற பொருளில் கவிஞர் இயக்கச்சி சி.கருணாகரன் புதுக்கவிதையும் நவீன கவிதையும் என்ற பொருளில் தொண்டைமானாறு வீரகத்தி மகாவித்தியாலய ஆசிரியர் சு.குணேஸ்வரன் கருத்துரைகளை வழங்கினர். கலாசார உத்தியோகத்தர் மிலாசினி றோகேசன் நிறைவுரை நல்கினார். (63,48)

# 10 ஆண்டுகளுக்கு ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாது

## தமிழக அரசு அறிவிப்பு



மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் படி, தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் அ.தி.மு.க. பொதுச செயலாளருமான ஜெயலலிதா, 10 ஆண்டுகள் தேர்தலில் நிற்க தகுதியிழப்பு செய்யப்பட்டுள்ளதாக சட்டப்பேரவைத் தலைவர் பிறப்பித்த உத்தரவு அரசாணையாக, தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.


சட்டப்பேரவைத் தலைவர் பி.தனபால், செயலாளர் ஜமாலுதீன் ஆகியோரது உத்தரவு, அரசாணையாக தமிழக அரசிதழில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

அதில், இலஞ்ச ஒழிப்புச் சட்டம் 1988 பிரிவு 13 (2)-இன்படி, ஊழல் வழக்கில் ஜெயலலிதாவுக்கு பெங்களூர் நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ள நிலையில், இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 191, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 ஆகியவற்றின் அடிப்படையில் அவர் தகுதியிழப்பு செய்யப்படுகிறார்.

அவருக்கு தண்டனை வழங்கப்பட்ட 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி முதல்; தமிழக சட்டப்பேரவை உறுப்பினரில் இருந்து தகுதியிழப்பு ஆகிறார். தண்டனைக்காலம் மற்றும் அதற்குப் பிந்திய 6 ஆண்டுகளும் அவர் தகுதியிழப்பு செய்யப்படுகிறார். இந்த உத்தரவு அவரது விடுதலை தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்பட்டு மாறுபடும்.

ஜெயலலிதா - சொத்துக் குவிப்பு வழக்கில், மேன்முறையீட்டு மனுக்களில் விடுதலை அல்லது தண்டனையில் மாற்றம் இல்லாவிட்டால், தற்போதைய உத்தரவுப்படி ஜெயலலிதா 10 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# லண்டன் டவர் பாலத்தில் கண்ணாடி நடைபாதை



உலகின் மிக பிரபலமான லண்டன் டவர் பாலத்தில் தேம்ஸ் நதிமட்டத்திலிருந்து 140 அடி உயரத்தில் கண்ணாடி நடைபாதையொன்று அமைக்கப்பட்டுள்ளது.


சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் இந்த கண்ணாடி நடைபாதைக்காக 10 இலட்சம் ஸ்ரேலிங் பவுண் செலவிடப்பட்டுள்ளன.

1982 ஆம் ஆண்டின் பின்னர் இப்பாலத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய மாற்றம் இதுவாகும்.

எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி இந்த நடைபாதை திறக்கப்படும். இதில் ஒரு தடவை நடந்து செல்வதற்கு 9 ஸ்ரேலிங் பவுண்கள் கட்டணமாக அறவிடப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.




# வால் நட்சத்திரத்தில் தரையிறங்கும் விண்கலம்




வால் நட்சத்திரத்தை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட விண்கலம், அதன் இறுதிக் கட்டப் பாதையை வெற்றிகரமாக எட்டியுள்ளதாக ஐரோப்பிய விண வெளி ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

வால் நட்சத்திர ஆராய்ச்சிக்காக கடந்த 2004-ஆம் ஆண்டு, பிலே எனப்படும் ரோபோவுடன் "ரொசெட்டா" என்ற விண்கலம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

160 கோடி டொலர்கள் செலவில் உருவாக்கப்பட்ட இந்த விண்கலம், இதுவரை 600 கோடி கிலோ மீற்றர்கள் தூரம் பயணித்து தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

விண்கலத்திலிருந்து பிரிந்து வால் நட்சத்திரத்தில் "பீலே" ரோபோ தரையிறங்குவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான சமிக்ஞைகள் விண்கலத்திலிருந்து ஆய்வு மையத்துக்குக் கிடைத்துள்ளன.

இந்த செயற்பாடுகள் சரிவர நடக்கும் பட்சத்தில், விண்கலத்திலிருந்து பிரிந்து "பீலே" ரோபோ, வால் நட்சத்திரத்தில் தரையிறங்கி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்று ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க தூதரகத்துக்கு மர்மப்பொதி எபோலா கிருமியா? பொலிஸ் ஆய்வு




நியூசிலாந்து நாட்டில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு கடந்த 24 மணி நேரத்தில் 3 முறை மர்ம பொதி வந்துள்ளது. அதில் வெடிகுண்டுகள் அல்லது எபோலா கிருமிகள் இருக்குமோ என்று பொலிஸார் ஆய்வு செய்து வருகின்றனர். நியூசிலாந்தின் தலைநகர் வெலிங்டனில் அமெரிக்க தூதரகம் இயங்கி வருகிறது.

இங்கு நேற்று காலை 6 மணியளவில் மர்ம பொதிகள் வந்துள்ளது. நேற்று முன்தினம் மாலையும் 2 மர்ம பொதிகள் வந்துள்ளன. இந்த பொதிகளை அமெரிக்க தூதரக அதிகாரிகள் சோதனை செய்தனர். இந்த 3 பொதிகளிலும் எபோலா நோய் தாக்கக் கூடிய பொருட்கள் ஏதேனும் இருக்குமோ அல்லது வெடி பொருட்கள் இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதுதொடர்பாக நியூசிலாந்து பொலிஸ் மற்றும் தீயணைப்பு துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் உடனடியாக வெடிகுண்டு சோதனை நிபுணர்களுடன் விரைந்து வந்து, அந்த 3 மர்ம பொதிகளையும் பாதுகாப்பாக எடுத்துச் சென்று சோதனை செய்து வருகின்றனர்.

# வெடிகுண்டுத்தாக்குதல் ஈராக்கில் 23பேர் பலி


(பாக்தாத்)

ஈராக்கில் நேற்று நடந்த வெடிகுண்டுத் தாக்குதல்களில் இராணுவ உயர் அதிகாரி உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர்.

பாக்தாத்தின் அல்-நிசோர் சதுக்கத்தில் உள்ள பொலிஸ் தலைமை அலுவலகத்தைக் குறிவைத்து தீவிரவாதிகள் வெடிகுண்டு நிரப்பிய காரை வெடிக்கச் செய்தனர். இந்த தாக்குதலில் 6 பொலிஸார் உள்பட 11 பேர் உயிரிழந்ததுடன் 21 பேர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை தியாலா மாகாணத்தில் இராணுவ அதிகாரி பைசல் அல் ஜுகைரி சென்ற வாகனத்தை குறிவைத்து தற்கொலைப்படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில், அதிகாரி ஜுகைரி மற்றும் அவருடன் சென்ற 5 பாதுகாவலர்களும் இறந்தனர். இதேபோல், யூசுபியா நகரில் இராணுவ சோதனைச்சாவடி மீது வெடிகுண்டுகள் நிரப்பிய காரை தீவிரவாதி வெடிக்கச் செய்ததில், 6 பேர் இறந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

# அணு உலைகள் அமைக்க ஈரான்-ரஷ்யா ஒப்பந்தம்



ஈரான் நாட்டில் புதிதாக 2 அணு உலைகளை கட்டுவதற்கு ரஷ்யா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் இரு நாட்டு உறவுகள் அதிகரிக்குமென ரஷ்ய அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஈரானில் செயற்படும் அணு உலைகள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கிறது. அதன்மூலம் உலக நாடுகளை பயமுறுத்த ஈரான் திட்டமிட்டு இருக்கிறது என்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. இதைத் தொடர்ந்து, ஈரான் நாட்டின் மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டன. ஈரானில் இயங்கும் அணுஉலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் இந்த அணு உலைகள் மருத்துவ தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், ஈரானில் புதிதாக 2 அணு உலைகள் அமைப்பது குறித்து ரஷ்யா பேச்சுவார்த்தை மேற்கொண்டது. பேச்சுவார்த்தை முடிவில், ஈரானில் புஷ்ஷேகர் என்ற 2 புதிய அணு உலைகளை அமைக்க நேற்று முன்தினம் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் ரஷ்யா சார்பாக ரோசாடாம் மாநில அணுஉலை தலைவர் செர்ஜி கிரியன்கோவும் ஈரானின் அணு உலைத் தலைவர் அலி அக்பர் சலேகியும் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாட்டின் உறவுகளும் வளர்ச்சி அடையும். ஈரானின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.

இந்த அணு உலைகள் மின் உற்பத்தி மற்றும் மருந்துப் பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படும். இதன்மூலம் ஈரானின் செல்வாக்கு மேலும் உயரும் என்று ஈரான் அணுஉலைகளின் தலைவர் அலி அக்பர் சலேகி கூறினார்.

மேலும்; தற்போது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, அங்கு புதிதாக நிர்மாணிக்கும் 8 அணு உலைகளுக்கும் ரஷ்யா யுரேனியத்தை விநியோகிக்கும் என்று ரஷ்யாவின் ரோசர்டாம் அணுசக்தி நிறுவனம் அறிக்கை வெளியிட்டது.

# ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் தாக்குதலில் கொலை



அமெரிக்க கூட்டுப்படைகள் நடாத்திய வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்க தலைவர் அபூபக்கர் அல் பாக்தாதி கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளன. புகைப்பட ஆதாரத்துடன் அந்த தகவலை ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஈராக்கில் அன்வார் மகாணத்தில் காயும் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்க தலைவர்கள் நடாத்திய கூட்டம் ஒன்றை குறித்து அமெரிக்க கூட்டுப்படைகள் கடந்த 10 ஆம் திகதி நடாத்திய தாக்குதலில் அபூபக்கர் அல் பக்தாதி காயம் அடைந்ததாக கூறப்பட்டது. ஆனால் அவர் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியானது. எனினும் இந்த தகவல்கள் உறுதி செய்யப்படவில்லை.

தற்போது அவர் இறந்து விட்டதாக புகைப்பட ஆதாரத்துடன் அல் இட்டிசாம் என்ற ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. பாக்தாதி இறந்து விட்டதாக வெளியான செய்தி சிரியா மற்றும் ஈராக்கில் ஆட்சியை கைப்பற்றும் அளவுக்கு முன்னேறறி வந்த ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்திற்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சுன்னாகம் வாசி நேற்று விடுதலை

கடந்த 1990 ஆம் ஆண்டு காணாமல் போனதாக கூறப்படும் சுன்னாகத்தை சேர்ந்த ஒருவர் அம்பாந்தோட்டை நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைகப்பட்டுள்ளார்.

கே.வைரவநாதன் என்ற இவர் காணாமல் போனதாக அவரது உறவினர்கள் பொலிஸ் மற்றும் மனித உரிமை அமைப்புகளிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

தேடியும் கிடைக்காத நிலையில் அவரை தேடுவதை ஒரு கட்டத்தில் உறவினர்கள் கைவிட்டனர்.

இந்த நிலையில் திடீரென அம்பாந்தோட்டை நீதிமன்றத்தில் இருந்து உறவினர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் வைரவநாதனின் தண்டனை காலம் முடிந்து விட்டதால் அவரை வந்து அழைத்துச் செல்லுமாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் அம்பாந்தோட்டை நீதிமன்றத்திற்கு சென்ற உறவினர்கள் அவரை பொறுப்பேற்றனர்.

1990 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் வைரவநாதன் சம்பந்தப்பட்டுள்ளதாக கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அவர் அப்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அமைய சிறையில் அடைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## மேலதிக...

பாணத்திலிருந்து கொழும்புக்கான சேவை ஞாயிற்றுக் கிழமை முதல் ஆரம்பிக்கும்.

வடக்குக்கான தபால் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்தில் ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் வடக்குக்கான இரவு நேர தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. தெற்கிலிருந்து வடக்குக்கு 21 ஆயிரம் பயணிகளும் வடக்கிலிருந்து தெற்குக்கு 28 ஆயிரம் பயணிகளும் முதல் மாதத்தில் பயணித்துள்ளனர். வடக்கு ரயில் சேவைக்கான சாதாரண கட்டணம் 320 ரூபாவாகும். யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள், ரயில் சேவை மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

## மவுரித்தானிய...

இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மவுரித்தானிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சிதி த்க் ஆகியோர் கைச்சாத்திட்டனர்

## வடக்கில்...

டாக மன்னாரில் புதிய தொழில்நுட்ப கல்லூரியொன்றும் ஜேர்மனி நிதியினூடாக கிளிநொச்சியில் முழுமையான வசதிகளுடன் கூடிய தொழில் பயிற்சி நிலையமொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பாடசாலைகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தொழில்நுட்பக் கல்வி ஆரம்பிக்கப்பட்ட 250 பாடசாலைகளின் மாணவர்களுக்காக தொழிற்பயிற்சிகளைப் பெற்றுக்கொடுக்க இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சினால் 448 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய இளைஞர் கொள்கையை முன்வைக்க நாம் நடவடிக்கை எடுத்தோம். இளைஞர்கள் பற்றி கொழும்பு பிரகடனத்தை முன்வைத்து அதனை உலக பிரகடனமாக மாற்ற எமது அமைச்சு நடவடிக்கை எடுத்தது. சர்வதேச மற்றும் தேசிய பயிற்சித திட்டங்களை இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுத்தோம். இவ்வமைச்சினூடாக இளைஞர் யுவதிகளுக்காக பாரிய பணியை நாம் ஆரம்பித்தோம்.

சமுத்திர பல்கலைக்கழத்தை ஆரம்பித்து நாட்டைச் சுற்றியுள்ள சமுத்திர வளத்தை இளைஞர்களுக்காக பெற்றுக்கொடுக்கிறோம். இளைஞர்களுக்கான தொழில் பற்றாக்குறையை குறைக்க நடவடிக்கையெடுத்துள்ளதுடன் வருடாந்தம் குறை வருமானமுடையவர்களுக்காக 50,000 புலமைப் பரிசில்கள் வழங்கியுள்ளோம்.

அதில் தெரிவு செய்யப்பட்டோருக்கு 3000 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.கிராமிய பிரதேசங்களில் இளைஞர்களை உதவியாளராக இணைத்துக்கொண்டு அவர்களுக்கு மாதம் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

தனியார் நிறுவனங்களில் 163,339 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான NVQ சான்றிதழ்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத தின் பின்னர் 4 வருட காலத்தினுள் இளை ஞர் அபிவிருத்திக்கான முயற்சிகள் முன்னெடுக் கப்பட்டன.

யுனிடெக் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு பட்டதாரி தரத்திற்க்கு இளைஞர்கள் உயர்த்தப்பட்டுள்ளனர். தனியார் பிரிவுகளுடன் தொடர்புடைய 3 பல்கலைக்கழகங்கள் தற்போது ஆரம்பிக்கப்புட்டுள்ளன. அரச பிரிவினூடாக தொழிற்கல்வி பல்கலைக்கழகங்கள் ரத்மலான- குளியாபிட்டிய- போன்ற 3 பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்ட பாட விதானங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன NSBM பல்கலைக்கழக கட்டுமானப்பணிகள் 2015ஆம் ஆண்டு முடிக்கப்படும்.

சாதாரண கல்வித்துறையில் நிலவும் தொழில் குறைப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிபுணத்துவ தினம் பிரகடனப்படுத்தப்பட்டு இளந்தலைமுறையினருக்கு ஒளிமயமான எதிர்காலத்தைப் பெற்றுகொடுக்க நாம் செயறபடுகிறோம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்...

அமுலுக்கு வரும் வகையில் மேல் நீதிமன்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

உடனடி இடமாற்றத்திற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை மேலும் வவுனியா மேல் நீதிமன்ற ஆணையாளராக கடமையாற்றும் சிவபாதசுந்தரம் யாழ் மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(170)

## பொது...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும் வேட்பாளரை தீர்மானிக்கின்றபோது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான, நிரந்தரமான, நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல் தீர்வு பற்றியும் மக்களின் அன்றாட தேவைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றியும் கருத்தில் கொள்ளப்படும் என்றும் இரா. சம்பந்தன் கூறினார்.

## இலக்குகள்..

திற்கு ஒரு தலைவர் தமிழரசுக்கட்சிக்கு இன்னொரு தலைவர் வடக்கு மாகாணசபைக்கு இன்னெரு தலைவர் என உருவாக்கி விட்டனர்.

இவர்கள் தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் ஒரே கருத்தையே கொண்டிருக்கவேண்டும்.

ஆனால் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று தலைவர்களும் மூன்று விதமாக சிந்திப்பதும், கருத்துக்களை வெளியிடுவதும், தமிழர் விவகாரத்தில் ஒரு தீர்வை முழுமையாக தராது.

இது எமது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும்.

எனவே எமது புரையோடிப்போன அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகளை தமிழ்தலைவர்கள் என கூறுபவர்கள் முதலில் ஒன்றிணைந்த கருத்தொருமித்த நிலைக்கு முன்வரவேண்டும்.

மாறாக கொழும்பில் ஒரு பேச்சு, இந்தியாவில் இன்னொரு பேச்சு வெளிநாடுகளில் வேறுவிதம் என கொள்ளப்பட்டால் அது பேச்சுக்களாகவே இருக்குமேமொழிய தமிழர்களின் தீர்வாக மாட்டாது என பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.


ஏழைமக்கள் எமக்காக என்றும் நீ பிறப்பெடுத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

அகவை 57ஆவது பிறந்ததினவாழ்த்துக்கள்

கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு

ஊரியம்பதியினில் உன் கால் பதித்து
இருளில் இருந்தகிராமத்தை
இருள் அகற்றிவைத்தநாயகனே
இல்லம் அற்றமக்களுக்கு
இல்லம் அமைத்துதந்தநாயகனே
போக்குவரத்துக்காக புது வீதி
அமைத்துதந்தநாயகனே
எமதுகிராமத்திற்காக
அளப்பரியசேவைஆற்றியஅமைச்சர்
நீடூழிவாழ்கவெனகிராமமக்கள்
சார்பாகவாழ்த்துகின்றோம்.



நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும்
தளராத ஆளுமையும், வீரத்தின் செறிவும்
கொண்டமக்கள் தலைவனே தேவா
57ஆவது அகவைகாணும் தலைவனே
ஏழைகளின் காவலனே உங்கள் பணி
என்றும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

☆ காரைநகர் ஊரியம்பதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.
☆ காரைநகர் ஊரியம்பதி கிராம அபிவிருத்திச்சங்கம்.
☆ காரைநகர் ஊரியம்பதிமாதர் கிராமஅபிவிருத்திச்சங்கம்.
☆ காரைநகர் ஊரியம்பதி ஸ்ரீ பழனிவேல் முருகப்பெருமான் பரிபாலன சபை.
☆ காரைநகர் ஊரியம்பதி ஸ்ரீ அண்ணாமார் ஆலய பரிபாலன சபை.
☆ காரைநகர் ஊரியம்பதி இந்து இளைஞர்சங்கம்.
☆ காரைநகர் ஊரியம்பதி இளந்தென்றல் விளையாட்டுக் கழகம்.


வாழ்த்துவோர்.

☆ சுந்தரமூர்த்திசத்தியரூபன் – பத்தர் கேணி மின்சாரசபைஉத்தியோகத்தர்.
☆ விஸ்வலிங்கம் மதிதரன் – விக்காவில் – காரைநகர் பிரதேசசெயலக உத்தியோகத்தர்.
☆ கதிரவேலுசயந்தன் – மருதபுரம் – முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும்,பிரதேசசெயலக உத்தியோகத்தரும்.
☆ காரைநகர் தெற்கு கமக்காரர் அமைப்பு.

(C/3469)

# தொழிற்சாலைகளில் பணி புரிவோர் இதய சுத்தியுடன் பணி செய்ய வேண்டும்

## வடகடல் நிறுவன அதிகாரிகளுடனான சந்திப்பில் அமைச்சர் தெரிவிப்பு



தொழிற்துறைசார்ந்தோர் இணக்கப்பாட்டுடன் கூடிய உண்மைத்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதுடன் தாம் பணி செய்யும் தொழிற்சாலைகளை இலாபகரமுள்ளதாக முன்னேற்றுவதற்கும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரின் வாசஸ்தலத்தில் நேற்று இடம்பெற்ற வடகடல் நிறுவனத்தின் கீழான மீன்வலை உற்பத்தி தொழிற்சாலைகளினது தொழிற்துறை நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் நடைமுறைச் சாத்தியமான வழி முறையிலும் உண்மைத் தன்மையுடனும் உழைக்க வேண்டு மென்பதற்கு அப்பால் தொழிற்சாலைகளை மென்மேலும் முன்னேற்றும் வகையில் அக்கறையுடன் உழைக்க வேண்டும்.

இவ்வாறான செயற்திட்டங்களுக்கு தேவையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல், இயங்கு நிலையிலுள்ள தொழிற்துறை இயந்திரங்களின் பராமரிப்பில் கூடிய கவனம் செலுத்தல், இயங்காத நிலையில் பழுதடைந்துள்ள இயந்திரங்களை திருத்தம் செய்து அவற்றையும் தொழிற்துறை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல் தவிர தொழிற்சாலைகளில் காணப்படும் ஏனைய பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

இக்கலந்துரையாடலில் வடகடல் நிறுவனத்திற்கு கீழான லுணுவில, வீரவில மற்றும் குருநகர் ஆகிய மீன்வலை தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் தேவைப்பாடுகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்நிகழ்வில், அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க, வடகடல் நிறுவனத் தலைவர் திஸவீரசிங்கம் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

# நெற்பயிர்ச்செய்கை வீழ்ச்சி வரட்சிக்கு நிவாரணமளிப்பேன்

## அரச அதிபர் அருமைநாயகம் தெரிவிப்பு

உருளைக்கிழங்கின் அறுவடைக் காலத்தினை விவசாயிகள் உரிய காலத்தில் எனக்குத் தெரியப்படுத்தினால் அதற்குரிய சந்தை வாய்ப்பினை மேற்கொள்வேன் என மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக விவசாயத்தில் பாரிய பின்னடைவினை எதிர்நோக்கியுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் வறட்சியை நிவர்த்தி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை தொடர்பில் அரச அதிபரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடந்தினை ஒப்பிட்டு பார்க்கும் போது, இந்த வருடம் நெல் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், வெங்காயம் மற்றும் ஏனைய பயர்ச்செய்கைகளும் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனைச் சமாளிக்க வேண்டிய நிலையில் நாம் இருப்பதுடன், முன் ஆயத்த வேலைகளை செய்வதற்கு தீர்மானித்து வருகின்றோம் என்றார். (25)

# திட்டமிட்டபடி பரிசுத்த பாப்பரசர் ஜனவரி 13 இலங்கை வருகை

## திருச்சபை பிரமாண்ட ஏற்பாடு

2015 ஜனவரி மாதம் 13ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பரிசுத்த பாப்பரசர் இலங்கை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைவார். அவர் திறந்த வாகனத்தில் விமான நிலையத்தில் இருந்து நீர்கொழும்பு வழியாக கொழும்பு ஆயர் இல்லத்திற்கு அழைத்து வரப்படவுள்ளார்.

கத்தோலிக்கத் திருச்சபை சம்மேளனம் மற்றும் அரச உயர் மட்டக்குழுவுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்த வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

பிற்பகல் 2.00 மணிக்கு ஆயர்களுடன் பகல் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளவுள்ளார். அதனைத் தொடர்ந்து 4.45 மணிக்கு ஜனாதிபதிக்கும் பரிசுத்த பாப்பரசருக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெறும்.

இதன்போது பாப்பரசரின் வருகை நிமித்தம் நிர்மாணிக்கப்பட்ட நினைவுச்சின்னம் ஜனாதிபதியினால் பாப்பரசருக்கு கையளிக்கப்படும்.

அன்றைய தினம் மாலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு விஜயம் செய்யவுள்ள பாப்பரசர் தேரர்கள் உட்பட சர்வமதத் தலைவர்களை சந்திக்கவுள்ளார்.

ஜனவரி மாதம் 14ஆம் திகதி வத்திக்கான் அப்போஸ்தல உயர்ஸ்தானிகராலயத்தில் இருந்து 7.15 மணியளவில் செல்லும் பாப்பரசர் 7.30 மணியளவில் திறந்த வாகனத்தில் காலிமுகத்திடலுக்கு வரவுள்ளார். காலை 8.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதுடன் முத்திப்பெயர் பெற்ற யோசேப் வாஸ் அடிகளார் புனிதராக உயர்த்தப்படவுள்ளார்.

இலங்கையின் முதலாவது புனிதர் யோசேப்வாஸ் அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திருப்பலியின் போது இலங்கை கத்தோலிக்க ஞாயிறு பாடசாலை மாணவர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்கவுள்ளனர். இதன்போது கத்ததோலிக்கர்கள் பாப்பரசரினால் ஆசீர்வதிக்கப்படவுள்ளனர்.

பிற்பகல் 2.00 மணிக்கு தேவாலயத்திற்கு செல்லவுள்ள பாப்பரசர் அங்கு ஜெபமாலை தியானத்தில் கலந்துகொள்ளவுள்ளார். பின்னர் மன்னார் ஆயர் பேராசிரியர் இராயப்பு ஜோசப்புடன் மடு அன்னையின் திருஉருவம் கொண்டு பக்தர்களை ஆசிர்வதிக்கவுள்ளதுடன் மக்களுடனும் கலந்துரையாடவுள்ளார்.

ஜனவரி 15ஆம் திகதி 8.00 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு செல்லும் பாப்பரசர் அரச பிரியாவிடை வைபவத்தில் கலந்துகொள்வார். அதன்பின்னர் பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலா நோக்கி புறப்படவுள்ளார்.

# இந்தியத் தூதுவருடன் கொழும்பில் பேச்சு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரை அழைத்து இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா அவசர பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இந்த சந்திப்பு மூன்று மணித்தியாலங்கள் வரையில் நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து நாட்டின் பிரதான சிறுபான்மை சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு கட்சிகளும் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறான தீர்மானம் எடுப்பது என்பது குறித்து இன்னமும் திட்டவட்டமான தீர்மானம் எடுக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று யாருக்கு ஆதரவளிப்பது என்பதனை இன்னமும் நிர்ணயிக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களை அவசரமாக அழைத்து இந்திய உயர்ஸ்தானிகர் பேச்சுவார்த்தை நடாத்தியமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இரட்டைச்சதம்; உலக சாதனை வசப்படுத்திய வீரர்

கொல்கத்தாவில் நடந்து வரும் இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மா, இரண்டாவது முறையாக இரட்டைச் சதத்தினைப் பெற்று உலக சாதனை படைத்துள்ளதுடன், ஒருநாள் போட்டிகளில் தனியொருவரினால் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டம் என்ற சாதனையையும் நிலைநாட்டியுள்ளார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. இதன்படி களமிறங்கிய இந்திய அணி 50 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 404 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக ரோஹித் சர்மா அதிரடியாக விளையாடி இரட்டைச் சதம் அடித்து அசத்தினார். மேலும் ரோஹித் சர்மா ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்து உலக சாதனை படைத்தார். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இரண்டு முறை இரட்டைச் சதம் அடித்த வீரர் என்ற பெருமையும் பெற்றார்.

# வடமராட்சி வடக்கில் பெயர்ப்பலகை திரைநீக்கம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை, கற்கோவளம் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பெயர்ப்பலகை திரைநீக்கமும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிறந்த தின நிகழ்வும் கற்கோவளம் கிராம மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

சங்கத்தின் தலைவர் செல்வராசா அழகேஸ்வரராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் பெயர்ப்பலகையை பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் இணைப்பாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் திரைநீக்கம் செய்து வைத்ததுடன் கட்சிக் கொடியையும் ஏற்றி வைத்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஐக்கிய இராச்சியம் (இலண்டன்) பிரதிநிதி மயிலிட்டி இராஜதுரை இராஜமோகன் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகவும், வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித தலைவர் திருமதி இந்திரன் கைலாஜினி, கட்சியின் கரையோர இணைப்பாளர் பிரான்சிஸ் இரட்ணகுமார், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச உபதலைவர் கி.சிவசாமி உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் பஸ்ஸை மோதித்தள்ளியது

## அரியாலையில் இருவர் படுகாயம்

பஸ் - டிப்பர் மோதலில் இருவர் யாழ்.அரியாலையில் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் அரியாலை கிறிஸ்தவ ஆலயத்திற்கு அருகில இடம்பெற்றது.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் அருகாமையில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்தது.

இந்நேரத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வந்த டிப்பர் வாகனம் பஸ்ஸின் பின் புறத்தில் மோதித்தள்ளியது.

இதில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சாரதி விநாயகமூர்த்தி சிவலோகநாதன் (வயது-54) மற்றும் ஒரு பெண் உட்பட இருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

டிப்பர் வாகனச் சாரதி மற்றும் வாகனம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (இ)

# வேலணையில் மரம் நாட்டு விழா

(வேலணை)

தேசத்தின் நிழல் தேசிய மரம் நாட்டு விழா நாளை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீஷன் தலைமையில் வேலணை பிரதேசசபை வளாகத்தில் முற்பகல 10.41 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் வேலணை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பொது அமைப்புக்கள், மன்றங்கள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் மரங்களை நாட்டி வைக்கும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (05)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.